# செல்வச்சந்நிதி

மலர் - 1961

University of Jaffna
235.5
CEL
249723(AR; Main)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

UNIVERSITY OF JAFFNA
LIBRARY
ARCHIVES
University of Jaffna
249723
Library
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சல்வச்சந்நிதி
# மலர்



ARCHIVES

இ66
CEL

சங்கம்

DIVINE LIFE SOCIETY
(BRANCH)
THONDAMANAR

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## QUALITIES THAT HAVE ALWAYS BEEN CHERISHED.

*and the demand has aptly proved that our range of Textiles excels in Choice,*

**QUALITY and DESIGN.**

Sarees, Fabrics, Silks, Cottons,
Wollen Suitings, Cotton Suitings,
Shirts and Shirtings, Children's wear
House hold linen, Furnishings,
Bed spreads, Etc,. Etc.

AT MODERATE RATE.

# MUNEER'S

79-81 K. K S. ROAD,
JAFFNA.

Tele { *phone:* **404**
{ *grams:* **Insaf**

---

சிறந்த தலை முடிகள், அன்பளிப்பு,

பரிசளிப்புப் பொருட்கள்,

அலுமினியப் பாத்திரங்கள்,

சாய்ப்புச் சாமான்கள், பேனு,

மணிக்கூடு மற்றும் றேந்தை

நூல் வகைகளுக்கும்

# கல்யாணி

ஆஸ்பத்திரி வீதி, : : யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுத்தமாக சுகாதாரமுறைப்படி

நவீன இயந்திரங்களினால்

## விலையுயர்ந்த மூலப்பொருட்களைக் கொண்டு

தயாரிக்கும்

# பேபி BABY BRAND மார்க்

# ஸ்பெஷல்

## பானங்களையே அருந்துங்கள்

எல்லா இடங்களிலும் கிடைக்கும்

தயாரிப்பாளர்:

## சுப்பிரமணியன் சோடாக் கம்பெனி

போன்: 97 தந்தி: சோடா

வல்வெட்டித்துறை

University of Jaffna
249723
Library

கிளை:

## ருஜு ஸ்ரோர்ஸ்

2/B ஸ்ரான்லி ரோட்
யாழ்ப்பாணம்.

போன்: 372. தந்தி: ESVES.

BRANCH:

## RAJU STORES

2/B STANLEY ROAD,
JAFFNA.

PHONE: 372 T'GRAMS: ESVES.

249723
249723
ARCHIVES
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒருமுறை விஜயம் செய்தால் உண்மை விளங்கும்.

# முருக விலாஸ்

Prop: **M. AR. இராசதுரை அன் சன்ஸ்**

பிரபல ஜவுளி வியாபாரம்,
வல்வெட்டித்துறை.

விலைகள் மிகவும் குறைவு! அரிய சந்தர்ப்பம்!!

தெரிந்தெடுப்பதற்கு இன்றே முந்துங்கள்!!!

மணிப்புரி, பெங்களூர், காஞ்சீபுரம்,
கோயம்புத்தூர், சேலம், காஷ்மீர்,
மதுரை

முதலிய இடங்களிலிருந்து

## பட்டு — பருத்தி புடைவைகள்

ஏராளமாக இறக்குமதி செய்துள்ளோம்.

## டெக்கா சாறிகள்

புதிய டிசைன்களில் வரவழைத்துள்ளோம்.

ரெலிபோன்: இல. 27

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*For Your*

# WEDDING SAREES

*Be it*

BENARES

MANIPURI

TISSUE

IN LATEST VARIETIES

VISIT

# DAYARAMS

THE SAREE PEOPLE

54, 56, 58 & 60, MAIN STREET, JAFFNA.

**Phone: 316**



2007

235.5
CEL

AR

ARCHIVES



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நவீன முறையில் புகைப்படங்கள் எடுக்கக்கூடிய

ஸ்தாபனம்

★ ★ ★

# பாரத் ஸ்ரூடியோ

82/1, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

Telegrams: BARATFOTO

Telephone: 252

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அ. குழந்தைவடிவேல்

(ஏ. கே. பிறதேஸ்)

வல்வெட்டித்துறை.

எங்களிடம் எல்லா விதமான:—

★ சாய்புச் சாமான்கள்.

★ மொனறா சைக்கிள்கள்.

★ சைக்கிள் சாமான்கள்.

★ பள்ளிக்கூட உபகரணங்கள்.

★ எலக்றிச் சாமான்கள்.

★ இரும்புச் சாமான்கள்.

*நிதானமான விலைக்கு மொத்தமாகவும் சில்லறையாகவும்* பெற்றுக்கொள்ளலாம்.

# K. KULANTHAIVADIVEL

(A. K. BROS)

GENERAL MERCHANT.

**VALVETTITURAI**

---

# ஸ்திரிகளுக்கு சரீரபோஷணை குறைவானல்

*உஷ்ணமதிகரித்து சரீரம் மெலிந்து கர்ப்பாசயம் சுருங்கி அநேக ரோகங்கள் உண்டாகின்றன. கெற்ப வாய்வுக்குத்து என்னும் சூதகவலி, வாந்தி, தலைவலி அஜீரணம், மார்புவலி, முதுகுவலி, முதலிய வியாதிகளினுற்கூட கஷ்டப்படுவார்கள். ருதுசூலை சந்தானத்திற்கிடங்கொடாது*

"ராதா" ***பிளட் டானிக்***

*எனும் சஞ்சீவி தேகபலத்தைக் கொடுத்து வலிமையை விருத்தி செய்து தளர்ந்துபோன கெற்பாசய நரம்புகளைப் பலப்படுத்திக் கெட்டுப்போன இரத்தத்தைச் சுத்தி செய்து தேக ஆரோக்கியத்தைக் கொடுக்கும்.*

**மூலிகைச் சத்து-லோகச் சத்துக்களைக் கொண்டு இரத்த விருத்திக்காகவும், நரம்புப் பெலத்துக்காகவும் வைத்திய நிபுணர்களால் தயாரிக்கப் பெற்றது.**

(1) சுவாசாசயம், கல்லீரல், இரத்தாசயம், பெலவீனப்பட்டு உண்டாகும் இளைப்பு, படபடப்பு, ஆயாசம் சுகப்படும் (2) கெற்பிணிகளுக்கு ஏற்படும் வெள்ளை, மூலரோகம், கால் வீக்கம், பசியின்மை, மயக்கம் கண் பூஞ்சலாடுதல், மலபந்தம், அசதி, சோம்பல், பலமின்மை இவை பூரண சுகமாகும். இன்னும் பல நோய்கள் குணமாகும் கேட்லாக் இலவசம். **8 அவுன்ஸ் புட்டி ரூ. 3-00.** (பார்சல் செலவு வேறு)

*இலங்கை ஏஜண்ட்:—*

# எஸ். சுப்பிரமணியம் அன் கோ

**53, கே. கே. எஸ். ரோட், யாழ்ப்பாணம்.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உத்தர வாதம்! நிதான விலை!!

# மகேந்திரன் ஸ்டோர்ஸ்

'முகாந்திரம்' வெற்றிவேலு பில்டிங்,

கண்டி ரோட், கிளிநொச்சி.

★

எங்களிடம்

சகல விதமான மோட்டார்கார் உறுப்புகளும்,
சைக்கிள் உபகரணங்களும்,
இரும்புச் சாமான்களும்,
சிமெந்து, நெல், அரிசி,
சாய்புச் சாமான்,
மற்றும் பல சரக்குச் சாமான்களும்,
கைக்கடிகார, சுவர்க்கடிகார வகைகளும்,
ரெங்பெட்டி, லெதர் வாய்ந் வகைகளும்

யாழ்ப்பாண விலைக்கு

மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்.

★

## MAHENDRAN STORES

General Merchant & Commission Agent

Prop: S. V. MHAENDRAN

"Muhandram" Vettivelu Building

KANDY ROAD, KILINOCHCHI.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# FANCY PALACE

**27, 29, MAIN STREET, JAFFNA.**

THE HOUSE THAT OFFERS

## YOUR SEASONAL GIFTS.

TOYS — A SPECIALITY FOR KIDDIES.

Distributors for:

**Sheaffers and Parker Pen**

**Falks**
**Sun Flame** } **Cookers**
**Butter Fly**

**Royal Hair Wigs**

## MEN WEAR SMARTEST
## ACTEX SLACKS.

Grams: "FANCYWARE" Phone: 239


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Y. PANDIYAN

KAPOK MERCHANT WHOLESALE & RETAIL DEALER
71, K. K. S. ROAD, JAFFNA.

- ★ திறமான பைபர்சூட் கேஸ், இந்தியன் லெதர் சூட் கேஸ்,
- ★ இந்தியன் டிறங் பெட்டிகள், பஞ்சு மெத்தை, தலையணைகள்,
- ★ டிறவிலிங் பேக், குடைகள், கல்கட்டா வாளிகள்,

இன்னும் பல வகைப் பொருட்கள்
சில்லறையாகவும் மொத்தமாகவும்
சகாய விலையிற் பெற்றுக்கொள்ளலாம்.

# வை. பாண்டியன்

**71. கே. கே. எஸ். ரோட், யாழ்ப்பாணம்.**

---

## K. ARUMUGAMPILLAI & SON,

ESTD. 1900

**Jewellers & Gem Merchants**
64, KANNATHIDDY ROAD, JAFFNA.

**For Jewellery of Latest Design, Quality, Workmanship.**

*Remember* "YAPPAN"

**The most Reliable & Well Established Old Firm of its Kind in the North.**

"SATISFACTION GUARANTEED"

*Tele* { *grams:* **'YAPPAN'**
{ *phone No.* **518**

**K. A. KANAGASABAI,**
*Proprietor.*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"MURUGAN STORES" A Place for your Latest Shopping

FOR

**BEST VALUE, HIGH QUALITY**

**LATEST MODELS**

Watches, Clocks, Stoves, Pens, Petromax, Torches,
Camera, Films, Rolled Gold Bands, Leather Straps,
Silk Cords, Presentation Articles, Fancy Goods,
Cycle and Spare Parts etc.

*Service and Satisfaction Guaranteed*


*Pay us a visit today and see our Display of Various Designs*

# MURUGAN Stores

Prop: T. BALASINGHAM

**140, K. K. S. ROAD, & 37, KASTHURIAR ROAD, JAFFNA.**

எங்களிடம்
மேசை மணிக்கூடுகள்,
கைக்கடிகாரங்கள், பேனைக்கள்,
ஸ்ரோவ்ஸ், பெற்றோமாக்ஸ்,
ரோச்செஸ், கமெரு, றேடியோ,
பற்றறி, சயிக்கிள்
அதன் உறுப்புகளும்
நவீன நாகரிகத்திற்கேற்ப மற்றும்
பொருட்களையும்
உத்தரவாதத்துடனும், மனத்திருப்தியுடனும்
மலிவாகவும்
பெறக்கூடிய நம்பிக்கையான இடம்.



Lusina
Wyler
Roamer
Norexa
Damas
Omodex
Invicta
Dreffa
Royce
Ambassader
Buler
Peler
Silvana

# முருகன் ஸ்ரோர்ஸ்

140, கே.கே.எஸ். ரோட் & 37, கஸ்தூரியார் ரோட், யாழ்ப்பாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முகமத்அலி அப்துல்அலி

5 & 7, பெரிய கடை, யாழ்ப்பாணம்.

இவர்கள் பி. சி. சி. ஸ்தாபனத்தாரின்
யாழ்ப்பாண பிரதேச ஏக விநியோகஸ்தர்கள்.

ஆகவே இன்றே உங்களுக்குத் தேவையான

பி. சீ. சீ. சந்தன சோப்

சவரின் பார் சோப்

குக்ஸ் ஜோய் (Cooks Joy)

வையிற் ஓயில் (White Oil)

ஹய்பவர் / பைனோல் நெருப்புத் தண்ணீர் Hi-Power / Pynol Disinfectant Liquids

ஆகியவற்றிற்கு உடன் விஜயம் செய்யுங்கள்
முகமத்அலி அப்துல்அலி அவர்களின்
வர்த்தக நிலையத்திற்கு.

## MOHAMMEDALLY ABDULALY

5 & 7, GRAND BAZAAR, JAFFNA

**Distributors for B. C. C. Products**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கணேசன் ஸ்ரோர்ஸ்

78, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.

*இன்றே எமது ஸ்தாபனத்திற்கு*

*விஜயம் செய்யுங்கள்!*

★

உங்களுக்குத் தேவையான,
புடவை வகைகள், சாய்ப்புச் சாமான்கள், சப்பாத்து வகைகள்,
டிறங்கு பெட்டிகள், சூட்கேஸ், றவலிங் பேக்ஸ், முடிமயிர் வகைகள்,
இன்னும் பலவித சாமான்களும் எம்மிடம் மலிவாகவும் நம்பிக்கை
உத்தரவாதத்துடனும் பெற்றுக் கொள்ளலாம்.

# KANESAN STORES

Prop: K. S KANAGASABAI

78, K. K. S. Road. JAFFNA

---

# பிரகாஸ் ஸ்ரோர்ஸ்



பல வருடங்களாக
அனேகரின் ஆசிகளைப்
பெற்றுப் பிரபல்யமாக விள
ங்கும் எமது ஸ்தாபனத்தில்
**காலத்திற் கேற்ற கவர்ச்சி**
**நிறைந்த**
*சப்பாத்துக்கள்*
செருப்புக்கள்
பலதரப்பட்ட வகையிலும்
தேவையான அளவுகளிலும்
விரும்பிய நிறங்களிலும்

ஆண்கள் பெண்கள் பள்ளிக்கூடப்பிள்ளைகள் குழந்தைகள்
எந்த நேரத்திலும் பெற்றுக்கொள்ளலாம்.
**இன்னும் தேவையான தொப்பி வகைகளையும் பெற்றுக்கொள்ள**
ஒரு முறை எமது ஸ்தாபனத்திற்கு விஜயம் செய்யுங்கள்.

**33,** கஸ்தூரியார் றேட், யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தங்க நகை மாளிகை

உரும்பராய்.

உள்ளம் மகிழும் உயர்ந்த தங்கப்பவுண் நகைகளுக்கு
உத்தரவாதத்துடன் கூடிய நம்பிக்கை–நாணயம்–நயம்மிக்க ஸ்தாபனம்.



- எங்களின் நகைகள் நீண்டகாலம் பாவிக்கக்கூடிய உறுதி வாய்ந்தவைகளாக இருக்கும்.
- தங்களின் மனத்திருப்தியே எங்களின் ஆதாயம்.
- ஒரு முறை பரீட்சித்தால் உண்மையை உணர்வீர்கள்.

உரிமையாளர்:

## K. S. கந்தையாப் பத்தர்

நகை வியாபாரமும் தொழிற்சாலையும்.

உரும்பராய் தெற்கு, : : உரும்பராய்.

---

உங்கள் கட்டிட வேலைகட்குரிய இரும்புக் கம்பிகள்,
சிலாகைகள், பித்தளைப் பூட்டுகள், பிணைச்சல்கள், பெயின்ற் வகைகள்
ஆணி வகைகள், தும்பு சாமான்கள் மற்றும் சகலசாமான்களும்
சகாயமாக இங்கே பெற்றுக் கொள்ளலாம்.

ஒரு முறை விஜயம் செய்து பாருங்கள்.

↓

## நெல்லியடி
# காட்வெயர் ஸ்ரோர்ஸ்

நெல்லியடி : : கரவெட்டி.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தங்கள்
மனத்திற்குகந்த
பலவித நகைகள்
கிடைக்குமிடம்

உங்கள் நம்பிக்கைக்கு
பாத்திரமான
வைர தங்க
நகை வியாபாரிகள்

ஓடர் நகைகள் குறித்த
தவணையில் உத்தர
வாதத்துடன் செய்து
கொடுக்கப்படும்

# S. THAMBIPILLAI & SON

MANUFACTURING JEWELLERS,
**191, K. K. S. ROAD, JAFFNA.**

## சி. தம்பிப்பிள்ளை அன் சன்

நகை வியாபாரம்
191, கே. கே. எஸ். ரோட், யாழ்ப்பாணம்.

HONESTY and PROMPTNESS ARE OUR MOTTO.

BEFORE GOING ELSEWHERE GIVE US A TRIAL.

## NOVEL & NEW DESIGN JEWELS.

---

**Tel: GEEPEETEE** **Est: 1953**

# GNANAPANDITHAN TEXTILES

PROP: **K. V. VISVALINGAM**
228, K K. S. ROAD, JAFFNA.

IMPORTER, WHOLESALE and RETAIL
TEXTILE MERCHANT

# ஞானபண்டிதன்

## ஜவுளிக் கடை

புரொப்: K. V. விஸ்வலிங்கம்

**228,** காங்கேசன்துறை ரோட், **யாழ்ப்பாணம்.**

சகல விதமான பிடவைத் தினுசுகளும் மலிவாகப்
பெற்றுக்கொள்ளலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சில்க் பரடைஸ்

**172–174, கே. கே. எஸ். ரோட், யாழ்ப்பாணம்.**

PROP: **R S MANIAM** TELEPHONE: **7018**

## பனாறிஸ், பங்களூர்,
## மைசூர் சேலைகளும்
## கூறைச் சேலைகளும்

நிதான விலைக்குப் பெற்றுக்கொள்ளலாம்.

# ராணி ஸ்ரோர்ஸ்

**121, கே. கே. எஸ். ரோட், யாழ்ப்பாணம்.**

எங்களிடம்
பலவித பட்டு பருத்தி நூல் பிடவைகளும்
சிறுபிள்ளைகளுக்குரிய உடுப்புகளும்
மலிவாகக் கிடைக்கும்.
நடுத்தர விலையில் கூறைச் சேலைகளும்
கிடைக்கும்.

## RANI STORES

121, K K S ROAD, —:— JAFFNA.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவலை ஏன்?

## றேடியோ

பிழைப்பட்டுவிட்டதா?

அல்லது மசகிட வேண்டுமா?

அப்படியாயின்

றேடியோ சேவையில் பலவருட அனுபவமும்

றேடியோக்களின் உப உறுப்புக்கள் எந்நேரமும்

கையிருப்பிலிருப்பதினாலும்

குறிப்பிட்ட காலத்தில்

நல்ல முறையில் திருத்திக் கொடுக்கும்

திறமையும் நேர்மையும்

குறைந்த செலவிலும் செய்து கொடுப்பவர்கள்.

# றேடியோ என்ஜினியேர்ஸ்

76, ஆஸ்பத்திரி வீதி,
(கொட்டடி)
யாழ்ப்பாணம்.

உங்கள் திருப்தியே எங்கள் நோக்கம். ஒருமுறை விஜயம் செய்யுங்கள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்டெக்ஸ்

## சேவிஸ் ஸ்டேசன்

உரிமையாளர்: சி. நல்லையா

தொண்டமானாறு.

இயந்திரங்களுக்கு பாதுகாப்பையும்,
சிக்கனத்தையும்
அளிக்கச் சிறந்தது

## கல்டெக்ஸ் எண்ணெய் வகைகளே!

Phone: 585 T'grams: MANSOORA

For

## FASHIONABLE & ARTISTIC JEWELS

Visit

# K. N. M. MEERAN SAHIB

52, 54, KANNATHIDDY, JAFFNA.

நவ நாகரிக, நங்கையர் விரும்பும்
அழகு நகைகட்கு

## கே. என். எம். மீரான் சாஹிப்,

கன்னாதிட்டி, யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செல்வச்சந்நிதி

## மலர்

உள்ளுறை.


பதிப்புரை. வீ. இரா. சிவகுமாரன்

அணிந்துரை. டாக்ரர் க. கணபதிப்பிள்ளை

தோத்திரப் பஞ்சகம்.
அல்வாயூர் கவிஞர் மு. செல்லையா ஆசிரியர்

கடவுள் வணக்கம்

செல்வச் சந்நிதி. 1

குருபரன். ஸ்ரீ சச்சிதானந்த சுவாமி. 3

உணர்வு என்று அருள்வாய். நா. முத்தையா 6

கூட்டுப் பிரார்த்தனை. வி. சுப்பிரமணியம் 8

மாதேவர்க்கு ஏகாந்தராகும் வழி. 'ஐயாறன்' 15

ஈழத்தின் இந்து சிறப்புச் செல்வங்கள்.
கலைப்புலவர் க. நவரத்தினம் 17

செல்வச்சந்நிதியின் கோலாகலம்.
'பொன்மலர்' 22



வெளியிடுபவர்கள்:
திவ்விய ஜீவன சங்கம்,
(கிளை)
தொண்டைமானாறு.

Published by:
DIVINE LIFE SOCIETY,
(BRANCH)
THONDAMANAR.

ஆவணி 1961.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

24872 3



கோவிலின் ஓர் அழகிய தோற்றம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்.

# பதிப்புரை.

ஈழத்தின் சரித்திரப் பிரசித்தி வாய்ந்த ஆலயங்களுள் தொண்டைமானாறு, 'செல்வச்சந்நிதி' யும் ஒன்று. இவ்வாலயத்தைப் பற்றிய வரலாறும், ஏனைய செய்திகளும் எம்மவர் பலருக்குத் தெரிந்தும் தெரியாமலும் இருந்து வருகின்றன. இக்குறைபாட்டை ஓரளவுக்காயினும் நிவர்த்தி செய்யவே இம்மலரைச் சமர்ப்பிக்கிறோம். இதையிட்டு எமது தொண்டைமானாறு 'திவ்விய ஜீவன சங்கம்' பெருமை கொள்ளாமல் இருக்க முடியாது.

இவ்வாலயத்தைப் பற்றி, அறிய வேண்டிய அத்தனையையும் இச்சிறு மலரில் வெளிக்கொணர்வது முடியாத காரியமாக எமக்குப் பட்டது. ஆகவேதான் செல்வச்சந்நிதியைப் பற்றிச் சாதாரணமாகத் தெரிய வேண்டிய அளவுக்கு இம்மலர்மூலம் அறியவைத்துள்ளோமென நம்புகின்றோம். பல சரித்திர நூல்களிலிருந்தும், கோவிலைப்பற்றிப் பாடப்பட்ட பாடல்களிலிருந்தும், கர்ண பரம்பரையாக வந்த கதைகளிலிருந்தும் பலவற்றை எடுத்துத் தந்துள்ளோம்.

எமது சங்கத்தைப் பற்றிச் சில வார்த்தைகள் இமய ஜோதியாய்விளங்கும் சுவாமி சிவானந்தர் அவர்களால் நிறுவப்பட்ட சங்கத்தின் ஒரு சிறு கிளையாகச் சென்ற பங்குனி மாதத்தில் இது ஆரம்பிக்கப்பட்டு இயங்கிவருகிறது. முற்றிலும் இளைஞர்களைக் கொண்ட எமது சங்கத்திற்கு வழி காட்டியாக எமது போஷகர் நல்லூர் சுப்பிரமணியானந்தா பெரிதும் உதவி செய்து வந்துள்ளார்கள். மக்கள் மத்தியில் 'நல்லெண்ணத்தையும் சமயப் பற்றையும்' வளர்ப்பதே எமது நோக்கம். பல கூட்டுப் பிரார்த்தனைகளை நடத்தி வந்துள்ளோம். 'தினமணி' ஆசிரியர் வானமாமலை அவர்கள் உட்பட பல பெரியார்களை வரவேற்கும் சந்தர்ப்பம் எமக்குக் கிடைத்ததையிட்டு நாம் மகிழ்ச்சி கொள்கிறோம்.

இம் மலரை உருவாக்க அயராத உழைப்பைத்தந்த எமது சங்க அங்கத்தவர்களுக்கும், இம் மலருக்குக் கட்டுரைகளும் கவிதைகளும் நல்கிய ஆசிரியர்களுக்கும் உறுதுணையாக நின்று எம்மை ஊக்குவித்த திரு க. இரத்தினவேலுப்பிள்ளை, திரு வே. க. நடராசா, திரு கா. மாணிக்கவாசகர், திரு சி. க. செல்வரத்தினம், திரு கே. முருகானந்தன், திரு வீ. சி. கந்தசாமி ஆகியோர்களுக்கும் நாம் என்றென்றும் கடமைப்பாடுடையோம்.

இம் மலரினது முழு அமைப்பையும் அழகுறச் செய்து தந்த ஊழியன் அச்சகத்தினருக்கும், விளம்பரங்கள் தந்துதவிய வர்த்தகர்களுக்கும் எமது நன்றியைச் செலுத்துகிறோம்.

தொண்டைமானாறு.
24-7-1961.

**வி. இரா. சிவகுமாரன்**
திவ்விய ஜீவன சங்கத்தலைவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

K. KANAPATHIPILLAI, B. A., PH. D. (LOND.)
PROFESSOR OF TAMIL

UNIVERSITY OF CEYLON
PERADENIYA.

# அணிந்துரை.

செந்தமிழ்க்குரவனும் கலியுக வரதனுமாகிய முருகப்பெருமான் கோயில் கொண்டருளியிருக்கும் திவ்விய தலமாகிய செல்வச்சந்நிதியின் சிறப்பு யாவருமறிந்ததே. அத்தலத்தில், முருகப்பெருமான் எழுந்தருளியிருந்து, அடியார்க்கெளியானாக அன்புடன் ஆற்றிவரும் திருவிளையாடல்கள் அனந்தம். மாயையினாற் கட்டுண்ட எம்மனோர்க்கு, தந்திருவுருவைக் காட்டாது எம்பெருமான் நின்றபோதும் இத்தலத்தில் தான் நிகழ்த்தும் வியத்தகு விந்தைச் செயல்களால், தன்னையுணரவைத்துத் தனக்குள் இன்புறுகின்றான்.

இத்தலத்துப் பெருமையைப்பற்றியும் ஆங்கு நடக்கும் விழாக்களின் சிறப்பினைப்பற்றியும் முருகனடியாரின் தகைமையைப் பற்றியும் வரைந்துள்ள கட்டுரைகளைத் தாங்கி இம்மலர் வெளிவருகின்றது. இதன்கண் முருகன் பெருமையைப் படித்து இன்புற்று, இப்பிறப்பில் அவன் திருவருளுக்காளாகி மறுபிறப்பில், அவன் திருவடிகளையடைந்து பேரின்பப் பெருவாழ்வைப் பெறுவாராக.

யாழ்ப்பாணத்து வரலாற்றின் சில நிகழ்ச்சிகளும் தொண்டைமானுக்கும் தொண்டைமானாற்றுக்கும் உள்ள தொடர்பும் இத் திருக்கோயில் வரலாறும் இவ்விதழில் இடம்பெற்றுள்ளன.

அருவமும் உருவமாகி அனாதியாய்ப் பலவா யொன்றாய்ப்
பிரமமாய் நின்ற சோதிப் பிழம்பதோர் மேனியாகிக்
கருணைகூர் முகங்க ளாறும் கரங்கள்பன் னிரண்டுங்கொண்டே
ஒருதிரு முருகன் வந்தாங் குதித்தனன் உலகமுய்ய. (1)

நாளென் செயும்வினை தானென் செயுமெனை நாடிவந்த
கோளென் செயுங்கொடுங் கூற்றென் செயுங்குமரேசரிரு
தாளுஞ் சிலம்புஞ் சதங்கையுந் தண்டையுஞ் சண்முகமுந்
தோளுங் கடம்பு மெனக்குமுன் னேவந்து தோன்றிடினே. (2)

கொள்ளித் தலையி லெறும்பது போலக் குலையுமென்றன்
உள்ளத் துயரை யொழித்தரு ளாயொரு கோடிமுத்தந்
தெள்ளிக் கொழிக்குங் கடற்செந்தின் மேவிய சேவகனே.
வள்ளிக்கு வாய்த்தவ னேமயி லேறிய மாணிக்கமே. (3)

க. கணபதிப்பிள்ளை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஸ்ரீ சுவாமி சிவானந்தா

**SRI SWAMI SIVANANDA**

SERVE LOVE MEDITATE REALISE

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

## சண்முகப் பெருமானார்

# தோத்திர பஞ்சகம்.

[அல்வாயூர் கவிஞர் மு. செல்லையா ஆசிரியர்]

### காப்பு.

தூயசெல்வச் சந்நிதியான் தோத்திரமாம் பஞ்சகத்திற்
கேயகரி மாமுகனை யெண்.

### விருத்தம்.

மண்ணுலகு கலியுகக் கடவுளென வாழ்த்தவும்
மாசிலாப் புலமைமிக்கோர்
வடிதமிழ்ப் பாமாலை யதுசூட்டி வையவும்
வற்றாத கருணைதந்தே
எண்ணரிய பிறவிகளி னீட்டுதீ வினையெலாம்
எரிமூன்பு பஞ்சுபோல
இல்லையாம் படிசெயும் வல்லவேற் குமரனே
என்மாசு தீர்த்தலரிதோ
விண்ணவர்கள் துயர்தீர மும்மலைச் சூர்க்குலம்
வீட்டியருள் நாட்டுமுருகா!
வேலும் மயிலுமிரு புணையென்று துணைநன்று
வேண்டவர மாண்டவிமலா!
தண்மைதரு தொண்டைமா னாற்றருகு திகழ்செல்வச்
சந்நிதி யமர்ந்துநாளும்
தணியாத பேராவ லூட்டிவினை வாட்டிவரு
சண்முகா னந்தகுருவே! (1)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிற்பமமை கோபுரம் மண்டபம் முதலான
சிறப்பிவை இலாத இந்தச்
சிறுகோயில் வீற்றிருந் தொருமந்த்ர மின்றியே
செய்கின்ற பூசைஏற்றே
அற்புதத் திருவருள் சுரக்கின்ற பெருமையினை
அகிலம் வியக்குமாற்றால்
ஆங்குறுங் கதிர்காம மொத்தவட கதிர்காம
ஆலயமி தென்றுபுகழக்
கற்றவர்கள் மற்றவர்கள் யாவர்க்கு மெளிதான
கருணைமழை பெய்துதீராக்
கன்மநோ யாதியன தீர்த்திருமை நலமூட்டுங்
கற்பகத் தெய்வமேவா!
தற்பர §னுதற்பொறியி னுற்பவித் திடுகுமர!
சந்நிதி அமர்ந்துநாளும்
தணியாத பேராவ லூட்டிவினை வாட்டிவரு
சண்முகா னந்தகுருவே! (2)

விண்ணினுயர் கோபுரத் துள்ளமணி யோசையால்
விளங்குசெல் வச்சந்நிதி
வேலவுன் திருக்கோயில் மான்மியங் கேட்கின்ற
*விபுதரும் மனங்குழைந்து
மண்ணிடைப் பிறக்கவிழை கின்றபதி யிதுவெனும்
மாட்சியினை உணரா இந்த
மட்டிக்கும் கன்னெஞ்சப் பட்டிக்கும் கடுகொத்த
வண்மையருள் புரிகுவாயோ?
பண்ணினிடை அருணகிரி பாடல்கேட் டின்புற்ற
பன்னிரு திருச்செவிகளில்
பாவியேம் முருகா! கடம்பா! குகா!வென்று
பகர்வெறும் சொற்கள்புகுமோ!
தண்ணிய கடம்புபுரள் மார்பனே! அருள்பொங்கு
சந்நிதி அமர்ந்துநாளும்
தணியாத பேராவ லூட்டிவினை வாட்டிவரு
சண்முகா னந்தகுருவே. (3)

§ (நுதல்-நெற்றி) * (விபுதர்–தேவர்கள்)

¶கண்டுநிகர் மழலைக் குறும்பினொடு முமையன்னை
கனகமடி மீதிலேறிக்
கைத்தாள மிட்டுநீ விளையாடு திருக்கோலக்
காட்சிதரு மக்கள்பெறவே
பண்டுதவ மில்லாத பேருக்கு முயர்மகவு
பாலித்து வாழ்வளித்துப்
பாருக்கு நற்பொருளும் மறுமைக்குத் திருவருளும்
படைக்கவர மீயுமுருகா!
மண்டுமைம் புலவேடர் ஈர்க்கவே தடுமாறி
வழிகெட்ட பாவியேனை
வாய்மைசேர் அன்பர்பேர் எழுதேட்டி னீற்றிலே
வைக்குமா றுளங்கொள்வையோ
தண்டரள மொத்தநெற் சோறுதந் திடுசெல்வச்
சந்நிதி யமர்ந்துநாளும்
தணியாத பேராவ லூட்டிவினை வாட்டிவரு
சண்முகா னந்தகுருவே. (4)

அன்னமடம் வைத்தன்பர்க் கமுதிறைப் பசியோட்டும்
அறஞ்சிறிதும் செய்தலறியேன்
'அரோகரா' என்றோதும் அருட்கா வடித்தொண்டில்
ஆனந்தங் காண்பதறியேன்!
வன்னமயில் வாகனு என்றுடப்பா லுருளும்
வளர்பத்தி பூண்டுமறியேன்!
வைவேலெனத் தாள மிட்டுனது திருநாமம்
வழுத்துபசனைத் திறமிலேன்!
கன்னல்மொழி யாரிருவர் அன்னைய ரெமக்கெனக்
காண்திருக் கோலமுடனே
கருணைவிழி யீராறு புன்னகைசெய் முகமாறு
கைவேல் கடம்புதிகழத்
தன்னல மறுத்தமயில் மீதுவரும் அப்பனே!
சந்நிதி யமர்ந்துநாளும்
தணியாத பேராவ லூட்டிவினை வாட்டிவரு
சண்முகா னந்தகுருவே. (5)

திருச்சிற்றம்பலம்.

¶ (கண்டு-கற்கண்டு)

## கடவுள் வணக்கம்.

விழிக்குத் துணைதிரு மென்மலர்ப் பாதங்கள் மெய்ம்மைகுன்றா
மொழிக்குத் துணைமுரு காவெனு நாமங்கண் முன்புசெய்த
பழிக்குத் துணையவன் பன்னிரு தோளும் பயந்ததனி
வழிக்குத் துணைவடி வேலுஞ்செங் கோடன் மயூரமுமே.

உருவா யருவா யுளதா யிலதாய்
மருவாய் மலராய் மணியா யொளியாய்க்
கருவா யுயிராய்க் கதியாய் விதியாய்க்
குருவாய் வருவா யருள்வாய் குகனே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மயில்வாகனத்தில் வேல் பவனி வரும் காட்சி.

249723

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செல்வச் சந்நிதி

செல்வச் சந்நிதி கோவில் பழம் பெருமை வாய்ந்தது என்பது யாவரும் அறிந்ததொரு விஷயமாகும். தொண்டைமானாற்று மக்களிடையே வழங்கி வரும் ஐதிகங்களின்படி இதன் தொன்மை சரித்திர காலத்துக்கும் முற்பட்டது என்பதையறிகிரேம். புவியியல் ஆராய்ச்சியாளர் சிலர் யாழ்ப்பாணக் குடாநாடு, ஒரு காலத்தில் தெற்கேயுள்ள நிலப்பரப்புடன் இணைந்திருந்ததெனவும், கனகராயன் ஆறு தொடர்ந்து பாய்ந்து இப்போதுள்ள தொண்டைமானாற்றின் படுக்கை வழியாக பாக்குநீரிணையை அடைந்தது எனவும் கருதுகின்றனர். அங்ஙனமாயின், ஆற்றங்கரையோரமாக சமுத்திரத்திற்கு அருகாமையில் சந்நிதி அமைந்துள்ள இடம், அக்காலத்திலும், அமைதியும் தனிமையும் கொண்டு விளங்கியிருக்குமாதலின் தியானத்திற்கும் செப தபங்கள் செய்வதற்கும் ஏற்றதொரு ஸ்தலமாக அது நிச்சயம் இருந்திருக்கும் எனலாம். இன்று நாகதம்பிரான் எழுந்தருளியிருக்கும் இடத்திலோ அல்லது அதற்கு அணித்தாகவோ ஒரு முனிவர் அக்காலத்தில் தவம் செய்து சமாதியடைந்தார் என மக்களிடையேயுள்ள ஓர் ஐதிகம் கூறுகிறது. எனவே இந்த இடம் மிக நீண்ட காலமாக ஒரு புனித ஸ்தலமாக விளங்கிவந்துள்ளது என்ற முடிவுக்கு வருதல் நியாயமானதே. நாகநாடு என அழைக்கப்பட்ட யாழ்ப்பாணத்தில் கி. பி. ஒன்பதாம் நூற்றாண்டு வரையும் அரசாண்ட நாக அரசர் காலத்தில் இந்நிலையையே வகித்து வந்துள்ளது இந்த ஸ்தலம் என்பதை நாம் ஊகித்துக்கொள்ளலாம்.

இலங்கை சோழப் பெருமன்னராட்சிக்குள் 10-ம் நூற்றாண்டினிறுதியில் கொண்டுவரப்பட்டதோடு, நமது ஸ்தலத்தின் வரலாற்றிலும் சில புதிய அபிவிருத்திகள் ஏற்படலாயின. சோழராதிக்கம் இலங்கையில் 1070இல் முடிவுக்குவரவே, 1ம் விஜயபாகு என்பவன் அரசனானன். அக்காலத்தில் சோழநாட்டில் சக்கரவர்த்தியாக விளங்கிய 1ம் குலோத்துங்கன் (1070–1118)விஜயபாகுவின் நட்பை வேண்டி நின்றபோது, இலங்கை யரசன் அவனது வேண்டுகோளை நிராகரித்து அவமதித்தான். இதனல் சோழர்கள் இலங்கைமீது மீண்டும் படையெடுக்க நேரிட்டது. இப்படையெடுப்பு குலோத்துங்கனின் பிரதம சேனதிபதியும், பல்லவகுலத் தோன்றலுமான திருவரங்க கருணாகரத் தொண்டைமான் என்பவனின் தலைமையிலேயே நடைபெற்றது. கி.பி. 1084இல் நடைபெற்ற இப்படையெடுப்பில், தொண்டைமான் வெற்றி பெற்றான். அதன்பின் தொண்டைமானாற்றுப் பிரதேசத்திலும் யாழ்ப்பாணத்தின் இதர இடங்களிலும் மக்களைக் குடியேற்றினன். இச்செய்தி யாழ்ப்பாண வைபவமாலை போன்ற யாழ்ப்பாணச் சரித்திர நூல்களில் கூறப்பட்டுள்ளது. அக்காலந் தொட்டு, தொண்டைமானாறு தமிழரசர்களின் பிரதான படைத்தளமாக விளங்கிவந்துள்ளது. தொண்டைமானாற்றில் குடியேறியவர்கள், தொண்டைமண்டலத்தின் பிரதான பட்டினமும், பல்லவர்களின் தலைநகருமான காஞ்சிபுரத்திலிருந்தும் அதற்கணித்தாகவுள்ள வேறு ஊர்களைச் சேர்ந்தவர்களாகவும் இருந்தனர். இச்செய்திகளை தொண்டைமானாற்று மக்களிடையே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழங்கிவரும் ஐதீகங்களிலிருந்தும்,
சிலநூல்களிலிருந்தும் அறிகின்றோம்.
தொண்டைமானாற்றில் குடியேற்றப்
பட்ட பல்லவத்தலைவர்களே பிற்காலத்
தில் "ஆரியச் சக்கரவர்த்திகள் அரசு"
என்ற தமிழ் அரசின் பிரதான சிற்பி
களாக இருந்தார்களென்பதை யாழ்ப்
பாணச் சரித்திரத்தின் இறுதிக்கால
வரலாற்றை ஆராய்ந்தவர்கள் ஒரு
வாறு ஊகிக்கலாம். யாழ்ப்பாணத்
தமிழ் அரசின் தொடக்ககாலத்தில்
தொண்டைமானுக்கும் தொண்டைமா
ஹறும் எப்படிப் பிரதான இடம்
இருந்ததோ, அதன் இறுதிக்
காலத்திலும் தொண்டைமானாறு நெ
ருங்கிய தொடர்பு கொண்டிருந்தது.
கரையாரின் சிற்றரசன் என்பவன்
முக்கிய இடத்தை வகித்திருப்பதைப்
பறங்கியர்களின் நூல்கள் அறிவுறுத்
துகின்றன. வீரத் தமிழ் மன்னன் சங்
கிலியின்புகழ் யாவரும் அறிந்தது. இச்
சங்கிலிமன்னனுடன் சேர்ந்தும், பின்
னர் அவன் இறுதியாக நல்லூரில் நடா
த்திய போரில் தோற்றுப் பருத்தித்
துறையை அடைந்து அங்கிருந்து இந்
தியா செல்லும்போது பறங்கியர்க
ளால் பிடிக்கப்பட்டு கோவாவிற்குக்
கொண்டு செல்லப்பட்டுச் சிரச்சேதம்
செய்யப்பட்ட பின்னரும், ஈழத்தமிழ
ரின் சுதந்திரப்போரை மங்காத வீரத்
துடன் நான்கு ஆண்டுகள் நடாத்தி
ஈற்றில் தொண்டைமானாற்றிலேயே
வீரமரணம் எய்தியவன் இககரையாரச்
சிற்றரசன்தான் என்பது வரலாறு
கண்ட உண்மை.

போர்த்துக்கீசரைத் தொடர்ந்து இலங்கையை ஆண்ட ஒல்லாந்தர் காலத்தில் இக்கோவில் தரை மட்டமாக்கப்பட்டது எனக்கருதப்படுகிறது. அங்ஙனம் நிகழ்ந்தமைக்கு அவர்களது சமயத் துவேஷமே போதிய காரணமாக நாம் கொள்ளலாம் எனினும், அதுபற்றி ஒரு சுவையான கதையும் மக்களிடையே வழங்கி வருவதை நாம் அறியலாம். பிறவிக் குருடனை ஒல்லாந்தன் ஒருவன் தன் குருடு நீங்கப் பெறுதபோக, சந்நிதியில் எந்த விசேடத் தன்மையும் இல்லையெனக்கூறித் தன்நாட்டவர் சம்மதத்துடன் கோவிலை இடித்துத் தரைமட்டமாக்கி விட்டான் என்பது கதை. எனினும், இந்த கோவில் தொண்டைமானாற்றில் வாழ்ந்து வந்த செட்டி வகுப்பினரால் கட்டப்பெற்று ஆங்கிலேயர் காலம்வரை (19-ம் நூற்றாண்டு) பரிபாலித்து வரப்பட்டதெனத் தெரிகிறது. இன்றும் தொண்டைமானாற்றில் வாழ்ந்துவரும் செட்டி வகுப்பினர், அந்தச்செட்டி வகுப்பினரின் சந்ததியினர் என்பது குறிப்பிடத்தக்கது. இப்பொழுது அவர்கள் கோவிலினருகே செட்டியூர் எனக் கூறப்படும் பகுதியில் வாழ்ந்துவருவது மட்டுமன்றி, இன்னும் கோவிலின் பரிபாலனங்களில் பங்குகொண்டும் வருகின்றார்கள். திருவிழாக்காலங்களில்சுவாமி வலம்வந்து முடிந்ததும், வடக்கு வீதியிலிருந்து சந்நிதானம் வரைக்கும் இவர்களே பாட்டுப்பாடி அழைத்து வரவேற்பர்.

செட்டிமார் பரிபாலனகால இறுதியில், அவர்கள் தமக்குள்ளே பிணக்குற்றுப் பூசை முதலியன செய்வதில் தவறியமையால், மருதர் கதிர்காமர் என்பவரிடம் கடவுளே சென்று எனக்குப் பூசையை நீயே தொடர்ந்து செய்வாயாக எனக் கட்டளை இட்டதாகவும், அக்குடியானவர் தான் கல்வியறிவற்றவனாதலின் பூசை செய்யும் தகுதியற்றவன் எனக் கூறியபோது "நீவாய் கட்டி பூசைசெய்வாய்" என உத்தரவிட்டதாகக் கூறப்பட்டது. மருதர் கதிர்காமர் ஆறுபவுண் கொடுத்துச் செட்டிமாரிடம் கோவிலை வாங்கியதாகக் கூறும் வரலாறும் ஒன்றுண்டு. எப்படியாயினும் 1840அளவில்கோவில் செட்டிமாரின் பொறுப்பிலிருந்த பரிபாலனம் ஒரு குடியானவரான மருதர் கதிர்காமருக்கு மாற்றப்பட்டது என்பது தெளிவாகிறது. அக்காலத்திலிருந்த

[3ம் பக்கம் பார்க்க]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குருபரன்

ஸ்ரீ சச்சிதானந்த சுவாமி.

"அருவமும் உருவமாகி அனாதியாய்ப் பலவாய் ஒன்றாய்ப்
பிரமமாய் நின்றசோதிப் பிழம்பதே மேனியாகிக்
கருணைகூர் முகங்களாறும் கரங்கள் பன்னிரண்டும் கொண்டே
ஒருதிருமுருகன் வந்தாங் குதித்தனன் உலகமுய்ய."

ஆதியும் அந்தமும் இல்லாத இறைவன் உருவம் இல்லாதவன்; ஞானிகளால் அரும்பெருஞ் சோதியாக அறியப்படுபவன்; ஏகனாய், அநேகனாய் எங்கும் நிறைந்தவன். பக்தர்களுக்குக் காட்சி தருதற்காகக் கருணைகூர்ந்து, திருமேனி கொண்டு எழுந்தருளுகின்றான். அதனையே கச்சியப்பசுவாமிகளும் உலகமுய்ய ஒருதிருமுருகன், கருணைகூர் முகங்களாறும் கரங்கள் பன்னிரண்டுங் கொண்டு உதித்தனன் என்கிறார்.

திருமுருகன் என்பது, பரம்பொருளின் குருமூர்த்தமே. குருவின்றி ஆன்மா இறைவனை அடையமுடியாது. இறைவனைச்சேர்ந்து பேரின்பத்தைப் பெறுதற்கு வழிகாட்டுபவர் குருவே. அந்தச் சற்குரு யார்? இறைவனின் திருவருளே குருவாக வந்தமைகின்றது. அகத்தும் புறத்தும் அருவாகி நின்று காத்து வரும் கடவுளின் திருவருட் சக்தியே காணுந் திருவுருவாகக் குருவாகி ஞானத்தை நல்கி நம்மையெல்லாம் வாழ்விக்கின்றது. இந்த உண்மையை அடிப்படையாகக் கொண்டதே ஸ்ரீமுருகன் ஸ்ரீவள்ளி திருமணமாகும். அதன் விளக்கத்தை இங்கு சிந்திப்போம்.

முதலில் கதை வரலாற்றைச்சுருக்கமாகப் பார்க்கலாம். சிவஞான முனிவர் தவம் செய்தார். தவநிலை கலைந்து கண் விழித்தார். முன்னிலையில் நின்ற மானிற் கண்ணோடிற்று. முனிவர் பார்வையால் மான் கருத்தரித்தது. அது ஒருபெண் குழந்தையை, வள்ளிக்கிழங்கு அகழ்ந்தெடுத்த கிடங்கினுட் பெற்றுச் சென்றது.

வேடுவர் தலைவன் நந்தகோபன் காட்டுள் வந்தான்; தனித்திருந்து அழும் குழந்தையைக் கண்டான்; மகவில்லாத்துயர்மாறி மகிழ்ந்தான். அன்புடன் வாரியெடுத்து, வீட்டை அடைந்தான். இல்லாளிடம் கொடுத்து இன்புற்றான். வள்ளிக் கிடங்கில் எடுத்த பிள்ளைக்கு வள்ளி என்றே திருநாமம் இட்டனர். ஸ்ரீவள்ளி, வேடுவர் மத்தியிற் செல்வமாக வளர்ந்தாள். பாலகப் பருவம் கழிந்தது. கன்னிப் பருவம் அடைந்தாள், தன் தோழியரோடு(வாழ்ந்துவரும் குலவழக்கப்படி) தினைபுனம் சென்று குருவிகள் வராதபடி, கவண் வீசிக் கல்லெறிந்து காவல் புரிந்தாள். தினைமுற்றிக் கதிர் வெட்டும் காலமும் வந்தது. நாரதரும் அங்கு வந்தார்; கும்

---

[2ம் பக்க தொடர்ச்சி]
அவர் பரம்பரையினர் தொடர்ந்து கோவிலைப்பரிபாலித்து அதன் மகிமையைப்பேணி வருகின்றனர். இத்தகைய புராதன மகிமை வாய்ந்த இக்கோவிலின் வரலாற்றை மேலும் தெளிவுபட விரிவாக ஆராய்ந்தெழுத அறிஞர்கள் முன் வரவேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரப்பெருமானின் அழகெல்லாம் விரித்துக்கூறினர். கன்னியின் கருத்தில் குமரன் குடிகொண்டான். கனவிலும் நினைவிலும் வள்ளி தன் காதலன் வரவையே காத்திருந்தாள்.

ஸ்ரீ வள்ளியின் தாபத்தை உணர்ந்தான் முருகன்; தினைப்புனம் நோக்கி வந்தான்; தன்னை விரும்பாத வேடுவர் பார்வைக்கு வேங்கையானன்; பின் விருத்தனனன், ஈற்றில் குமரனுகிக் குறவள்ளியை அழைத்துச் சென்றான். அப்போது யாரும் கண்டிலர். வள்ளியின் செலவை அறிந்தனன் வேடர் தலைவன், படைகளுடன் தேடிச் சென்று எதிர்த்தான்; எதிர்த்தவரெல்லாம் இறந்தவரெனவே மயங்கி வீழ்ந்தனர். ஸ்ரீ முருகன் ஆயுதத்தினுல் அல்ல; முருகன் கொடியாக அமர்ந்திருந்த கோழிச் சேவலின் ஓசையால்; சுற்றமெல்லாம் மாண்டதே என்று வள்ளி ஒருகணம் மனம் சோர்ந்தாள். அவள் நிலைகண்ட கந்தன், வள்ளிபாற் கடைக்கண் நோக்கினன். அவன் அருள் நோக்கம்பெற்ற அம்மையார் அமைதிபெற்றுத் தன்முன் வீழ்ந்து கிடந்தோரைப்பார்த்தாள். அனைவரும் உயிர்த்து எழுந்தனர். எல்லோரிடமும் சாந்தியும் சந்தோஷமும் நிறைந்திருந்தது. தங்கள் முன் தோன்றிய ஸ்ரீ முருகனையும், வள்ளியையும் தெய்வமெனக்கண்டு பரவிப் பணிந்து மகிழ்ந்தனர். வேண்டிய உபசாரம் செய்து போற்றினர். கருத்தொருமித்த ஸ்ரீ கந்தனையும் வள்ளியையும் கண்டு மகிழ்ந்தனர்.

ஸ்ரீ வள்ளியின் திருமணம் தருகின்ற தத்துவத்தை ஆராய்வோம். சிவஞானமுனிவர் மானை நோக்க அது கருத்தரித்தது:- சிருஷ்டியைவிரும்பிய சிவன் பிரகிருதி மாணுகிய மாயையில் உலகத்தை தோற்றுவித்தார்.

மான்வயிற்றில் கருத்தரித்த குழந்தை வள்ளிக்கிழங்கிற் பிறந்து வள்ளியெனப் பெயர் பெற்றது:— உலகில் உருவெடுக்கும் ஆன்மா எந்த உடம்பினை தாங்குகிறதோ அதனேடு சம்பந்தப்பட்ட பெயரைப் பெறுகிறது. உதாரணமாக மானிட சரீரத்துட்புகும் ஆத்மா மனிதன் என்றும், விலங்குடலிற் புகுவது விலங்கு என்றும் பெயர் பெறுகிறது.


காட்டிற் கிடந்த வள்ளியை வேட்டுவர் தலைவன் சொந்தமாக்கினன்; வேடுவர் மத்தியில் வளர்ந்தாள்:- தாமஸ குணத்துடன் இருந்த ஆன்மாவை, இராக்ஷஸ குணம் சொந்தமாக்கிற்று; ஐம்புலன்களாகிய வேடுவர் மத்தியில் வளர்ந்தது. (உலக போகங்களையே விரும்பி வேட்டையாடுந் தன்மை வாய்ந்தவை ஐம்புலன்கள்.)

குழந்தைப் பருவம் நீங்கிக் கன்னிப்பருவம் அடைந்த வள்ளி தினைப்புனம் சென்ருள், அங்கு நாரதர் வாயிலாகத் தன் தலைவன் அழகைக் கேட்டுக் காதல்கொண்டாள்:— அறியாமை அகல, நன்மை தீமைகளைப் பகுத்தறியும் ஆற்றல் பெற்ற ஆத்மாவிடம், நற்சிந்தனை தோன்றிற்று; நித்திய தலைவனுகிய இறைவன் புகழை அறிந்து, அவரை அடைய ஆவல் கொண்டது.

ஸ்ரீ வள்ளி தினைப்புனங்காத்தாள்; தினை கதிர் வந்து முற்றியது; குருவிகள் கதிரைக்கவராமல் கவண்வீசி கல்லெறிந்து கலைத்துக் காவல் புரிந்தாள்:— வள்ளிதவம்செய்தாள்; அதன்பயனுக வந்த சாந்தி, சக்தி, சித்தி ஆகியவற்றைக் கெடுத்துச் செல்லத் தடைகள் தோன்றின; அவற்றை விவேகம் என்னும் கவணில் வைராக்கியம் ஞானம்என்னும் கற்களைப் பொருத்தி நீக்கினள்.

ஸ்ரீ வள்ளி அல்லும் பகலும் தலைவனை நினைந்தாள்; அவள் கருத்தை அவன் அறிந்தான்:— ஆன்மா இறை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பூங்காவனத்தில் பெருமான் எழுந்தருளியிருக்கும் காட்சி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உணர்வு என்று அருள்வாய்!

நா. முத்தையா

இறைவனை எல்லாரும் நினைக்கின்றனர். இறைவன் ஒருவன், இல்லை என்று சொல்லும் நாஸ்திகர்கள் கூட நினைக்கின்றனர். ஆஸ்திகர் உண்டு என்ற உருவத்தில் நினைக்கின்றனர். நாஸ்திகர் இல்லை என்ற உருவத்தில் நினைக்கின்றனர். இதுவே வித்தியாசம். இங்ஙனம் நினைக்கும் ஆயிரத்தில் ஒருவரோ இலட்சத்தில் ஒருவரோ தான் உணருகின்றனர். பல நாள் நினைவின் பயன் உணர்வாகும். நினைந்து நினைந்து உணர்ந்து உணர்ந்து என்கின்றார் வள்ளலார்.


உலகில் உணர்வால் உந்தப்பட்ட மக்களே பல விஷயங்களைச் சாதித்ததாகச் சரித்திரம் கூறுகின்றது அருணகிரிப் பெருமான் முருகனிடம் உபதேசம் பெற்று முருகன்மீது பதினாறாயிரம் திருப்புகழ் உணர்ந்து பாடியவர். அவன் திருநாமத்தை உணர்ந்து ஓதியவர். காதலாகிக் கசிந்து கண்ணீர்மல்க அவன் நாமத்தைப் பஜித்தவர். அத்தகைய அருணகிரிப் பெருந்தகை முருகப் பெருமானைப்பார்த்து உணர்வு என்று அருள்வாய் என வேண்டுகின்றார். அவருக்கு உணர்வு இல்லையா? நிறைய உண்டு. அவரிடம் உணர்வு இல்லையெனில் இவ்வளவு பாடல்களைப் பாடியிருக்க முடியுமா? முடியாது.

குழந்தைக்காகத் தாய்வேண்டுதல் செய்தல் போலவும், வழக்காளிக்காக நியாயவாதி பேசுதல் போலவும்; அருணகிரிப் பெருந்தகை முருகப்பெருமானிடம் எங்களுக்காக உணர்வு என்று அருள்வாய் என வேண்டுகின்றார். இங்கே உணர்வென்பது அநுபவ ஞானமாகும். உணர்வாகிய அநுபவ ஞானம் வெளிப்படுவதற்கு மூலகாரணமாயுள்ளது உருகும் செயலாகும். நினைந்து நினைந்து; உணர்ந்து உணர்ந்து; நெகிழ்ந்து நெகிழ்ந்து; அன்பே நிறைந்து நிறைந்து; ஊற்றெழுங் கண்ணீரதனால் உடம்பு நனைந்து நனைந்து; ஆகின்ற நிலையே உருகும் செயலாகும். உருகும் செயல் நிகழவே உணர்வுநிலை பீறிட்டெழும். இந்த உணர்வு நிலையை வளர்க்கவேதான் சமய சாதனைகள் எல்லாம் எழுந்தன.

உணர்வு நிலை அடைவதற்கு உருகுஞ் செயல் நிகழ வேண்டும். உருகுஞ் செயல் எதனால் நிகழும்? முருகன், குமரன், குகன் என்று மொழிவதனால் நிகழும். முருகு—தெய்வத்தன்மை; முருகன் - தெய்வத்தன்மை உடையவன். குமரன் என்பது குமாரன் என்பதன் திரிபு. கு— அடியார்களுடைய அஞ்ஞானத்தை, மாரன் - அழிப்பவன். குகன் - அடியார்களுடைய இதய குகையில்வசிப்பவன், முருகன் என்னும் போதே இதயம் முழுவதும் தெய்வத்தன்மை நிரம்பி விடுகின்றது. குமரன் எனும் போதே அஞ்ஞானம் அத்தனையும் அகன்றோடிவிடுகின்றது. அஞ்ஞானம் அகலவே குகன் இதயவாசனாய் விடுகின்றான். மெய்தான் அரும்பிவிதிர் விதிர்த்துன் விரையார் கழற்கு என் கைதான் தலைவைத்துக் கண்ணீர் ததும்பி உள்ளம் வெதும்பிப் பொய்தான் தவிர்ந்து உன்னைப்போற்றி சயசயபோற்றி என்னுங் கைதான் நெகிழவிடாத பெருநிலையை அருளவேண்டுமென அருணகிரிப் பெருமான் வேண்டுகின்றார்.

முருகப் பெருமான் சிவபெருமானுக்கே பிரணவப்பொருளை உபதேசம் செய்தவர். அதனால் குருநாதன் என்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தேரில் பெருமான் வீதிவலம் வருதல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

றும் குருபுங்கவன் என்றும் முருகப் பெருமான் அழைக்கப்படுகின்றார். சிவ பெருமானுக்குக் குருநாதன் எனவே அகிலாண்டகோடி சராசரங்களுக்கெல்லாம் குருநாதராகுந்தன்மையை அடைகின்றார். இப்படிப்பட்ட குருநாதராகும் முருகப்பெருமானை தேவர்களும் பூவுலகத்தவர்களும் துதித்தவண்ணமே இருக்கின்றனர். சிவபெருமானுக்குப் பிரணவப்பொருளை உபதேசித்து குருநாதர் ஆகுந்தன்மையைப் பெற்றவாறு, எமக்கும் உபதேசம் அருளிக் குருநாதராகும் பெறுபேற்றினையடையும் நாள் எந்நாளோ எனத் தேவரும் புவியிலுள்ளாரும் ஏங்குகின்றனர்.

பொருபுங்கவர் என்றால் சண்டையிடுகின்ற தேவர்கள் என்பது பொருள். தேவர்கள் யாரோடு சண்டையிடுகின்றார்கள்? காமம், குரோதம் முதலியவைகளோடு போர் செய்கின்றார்கள். கோபம் வந்தால் அறிவாளால் வெட்டிவிடவேண்டும், குரோதம் வந்த உடனே மண்டையை உடைக்கவேண்டும். இவ்வகையான துர்க்குணங்களை ஒழிப்பதில் வீரர்களாக இருக்கவேண்டும். அப்படிப்பட்ட முயற்சியிலே நாம் ஈடுபடவேண்டும், முளைக்கும்போதே கிள்ளிவிடவேண்டும்.

தேவர்களாவதற்கு வழிகள் மூன்று உள. அவை:-

1. எவ்வுயிரையுந் தன்னுயிர் போலப் பார்க்கும் கருணை உள்ளம் படைக்கவேண்டும்.
2. அறிவை அறிய வேண்டும்.
3. தீமனம் அடக்க வேண்டும்.

இவர்களே தேவர்கள். மாமிசம் தின்போரெல்லாம் மானிடப்புலையர், ஆகையால் எந்த உயிரையுங் கொல்லாமல் இருக்க வேண்டும். மனதை அடக்குபவன் தேவனாவான். முருகனை அருணகிரியார் எண்குண பஞ்சரனே என்கின்றார். பஞ்சரம் என்றால் கூடு அதாவது இயல்பாயமைந்த எட்டுக் குணங்களாகிய கூட்டுள் விளங்குபவனே! என்பது பொருள்.

எண்குண பஞ்சரனே! அடியேனுக்கு அநுக்கிரகம் செய்வீராக! உருகும் செயல் தந்து அருள்வீராக! எப்படி உருகவேண்டும்? முருகன், குமரன், குகன் என்று மொழிந்து உருகும் செயல்தந்து, உணர்வு என்று அருள்வாய்! கடவுளுடைய நாமங்களிலே ஆயிரம் நாமங்கள் சிறந்தவை. அவற்றுள் நூறு சிறந்தவை, அவற்றுள் பதினாறு சிறந்தவை, இப்பதினாறிலும் மூன்றே சிறந்தவை. அவற்றுள் தலைசிறந்தது முருகன் என்பது. அஞ்சுமுகம் தோன்றில் ஆறுமுகம் தோன்றும். வெஞ்சமரில் அஞ்சலென வேல்தோன்றும். ஒருகால் நினைக்கின் இருகாலும் தோன்றும், யாருக்கு! முருகா என்று ஓதுவார்க்கு.

ஆகவே எம்பெருமானே! முருகா, முருகா, முருகா, குமரா, குகா, முருகா என்று சொல்லி, உருகும் செயல் தந்து உணர்வு என்று அருள்வாய்.

கன்னி வேட்டை ஆடச் சென்ற திண்ணனார் ஆறுநாட்களிலே கண்ணப்பராக மாறினாரே! இந்த அன்பு நிலையை எனக்கு அருளமாட்டீரா? அன்பு அளவுக்கு மீறிப்போகும்போது அபேதநிலைதானே வந்தடைகின்றது. இலிங்கத்திற்குத் தினப்பூஜை செய்யும் சிவகோசரியார், கண்ணப்பர் செய்த அசுசியைக்கண்டு ஐந்து நாட்களாகக் கதறினார். ஆண்டவன் கண்ணப்பரைக் கோபித்தாரா? இல்லை. ஆண்டவன் அப்படிச் செய்யவில்லை. சிவகோசரியார் கனவில் தோன்றினார், "நீ பூஜை செய்கின்றாய். இதைவிட விசேடமாக அவன் பூஜை செய்கின்றான். என் பின்னே நின்றுபார் என்றார்" கண்ணப்பர் உருகும் அன்பு சிவகோசரியார் உணர்வு அன்பு, ஆகையால் உரு

[8ம் பக்கம் பார்க்க]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கூட்டுப்பிரார்த்தனை.

வி. சுப்பிரமணியம்

தனக்கு மேல், மேலான தொன்றில்லான் எவனோ, அவனே இறைவன். அவனே எல்லோராலும் வணங்கப்பட வேண்டியவன். அத்தகைய இறைவனை மனத்தால் நினைக்க இயலும் வகையில் ஒரு உருவத்தில் இருத்தி வணங்குதலே வழிபாடு ஆகும். வழிபாடு, பிரார்த்தனை ஆற்றப்படுத்தல் என்பன ஒரு பொருளையே குறிப்பனவாகும்.

ஒரு உருவத்தைச்சார்ந்தே— ஒரு உருவத்தை உட்கொண்டே நாம் இறைவனை வணங்கி இறைவன் வடிவமே ஆக வேண்டியவர்களாயிருக்கிறோம். இதுவே மெய்ஞ்ஞானிகள் கண்ட முடிபு. எங்கள் சிந்தனை இலகுவில் இறைவனிடம்படியும்வண்ணம் மெய்ஞ்ஞானிகள் எடுத்துக் காட்டியவைகளே திருவுருவங்களாகும். இத்திருவுருவங்கள் வெறும் சித்திரங்களல்ல. சித்திரங்களுக்கும் இத் திருவுருவங்களுக்கும் உள்ள தாரதம்மியங்களைத் திடமாய் அறிந்தவன் எவனோ அவனே உண்மையானபக்தன்; அவனே உண்மையானயோகி; அவனே உண்மையான ஞானியுமாவான். ஏனெனில் இத்திருவுருவங்கள் எல்லாம் மனிதன், தன் அறிவால் அறியமுடியாத, ஆனால் இறை அருள் அறிவிக்கவே அவன் அறியும் பேருண்மைகளை, அதாவது தத்துவங்களைத் தங்களுக்குள் அடக்கியிருக்கின்றனவாகும். இதனாலன்றோ மணிவாசகப் பெருமான் அம்மை அப்பன் திருவுருவத்தைக் குறிக்கும் இடத்தில் "இது அவன் திருவுரு, இவன் அவன்" என்று மிகவும் நயம்படக் கூறியருளினார்கள். "இவன் அவன்" என்னும் வாக்கியத்தை நாம் நன்கு ஆராய்ந்தால் திருவுருவ வழிபாட்டின் இன்றியமையாமையை நாம் நன்கு உணர்ந்தவர்களாவோம் இத்திருவுருவம் தாங்கி என்னை ஆட்கொண்ட பொன்மேனி எம்மானே வேதத்தின் உட்பொருளானவனும்; மனத்தால் முழுதும் உணரவும்; வாக்கால் முழுதும் சொல்லவும் இயலாத பெருநிலைப் பொருள்—அதாவது சத்+சித்+ஆனந்தன்– ஆவான் என்னும் பொருள்படப் பல இடங்களில் மணிவாசகனார் கூறியிருக்கிறார்கள். எல்லா அடியார்களும் இக்கருத்துப்படவே சொல்லிருக்கிறார்கள். திருமுறை, நாலாயிரப் பிரபந்தம் முதலிய பக்திப்பெரு நூல்களை நாம் ஆராய்ந்தால் இக்கூற்று நன்கு விளங்கும். ஆகவே இறைவன் பரிபூரணன் ஆவன். இப்பரிபூரணனை ஒரு திருவுருவத்தில் பரிபூரணனைத் தரிசித்து வணங்குவதே திருவுருவ வழிபாட்டின் இரகசியமாகும். கீழே தரப்படும் ஈசாவாசிய உபநிடதமும் இதனை வலியுறுத்துகிறது:—

---

[7ம் பக்கத் தொடர்ச்சி]

குதல் முன்னே, உணர்தல் பின்னே. உருகுதலிலிருந்துதான் அந்த உணர்வைக்காட்டினார். அதனால்தான் அருணகிரிநாதர் உருகுதலை முன்னே வைத்தார். உணர்தலைப் பின்னே வைத்தார். இப்போ அதனை அருணகிரியார் வாக்காலேயே உணருங்கள்.

முருகன் குமரன் குகன் என்று மொழிந்து
உருகுஞ் செயல்தந்து உணர்வு என்று அருள்வாய்
பொருபுங்கவரும் புவியும் பரவும்
குருபுங்கவ எண்குண பஞ்சரனே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அதுவும் பூரணம் இதுவும் பூரணம்
பூரணத்தில் உதித்ததும் பூரணம்
பூரணத்திலிருந்து பூரணத்தை எடுப்பின்
இருப்பதும் அப்பூரணமே.
'ஓம் சாந்தி - சாந்தி - சாந்தி"

இதிலிருந்து நாம் ஒரு பேருண்மையை அறிகிறோம். எல்லாத் திருவுருவங்களும் எம்மை ஆட்கொள்ள இறைவன் எடுத்த திருமேனிகளாவனவாகும் எந்தத் திருவுருவத்தை நாம் எடுத்துக் கொண்டாலும் அதில் பரிபூரண இயல்பையே காணமுயலல் வேண்டும் சமீப காலத்தில் எங்களிடையே பேரறிவினராக விளங்கிய இராமகிருஷ்ண பரமகம்சரே இதற்குச் சான்ருவார். அவர் காளிதேவியையே கலாதீதப் பொருளாக வழிபட்டு ஒரு அவதார புருடராகத் திகழ்கிருர்—என்றும் அதுவேயாகத் திகழ்வர்.

எங்களிடையே ஒவ்வொருவருக்கும் சிறப்பாக ஒரு இஷ்டதெய்வம் இருக்கிறது. ஒவ்வொருவரும் தன் தன் இஷ்டதெய்வத்தில் பரிபூரணத்துவம் காணல் வேண்டும். இவ்விடத்தில் எல்லோருக்கும் ஒரு பெரும் சந்தேகம் இருக்கத்தான் செய்யும். அது என்னே? "எனது இஷ்ட தெய்வத்தை நான் நினைக்க முயலும்போது வேறு ஒரு தெய்வத்தின் சிந்தனை குறுக்கிட்டால் நான் என்னசெய்வது? அல்லது திருக்கோவில்களில் பல திருவுருவங்கள் இருக்கின்றனவே. இஃது இப்படியிருக்க, நான் எவ்வாறு என் இஷ்ட தெய்வ வணக்கத்தைத் திடப்படுத்துகிறது?" இதற்குப் பெரியோர் கூறும் சமாதானமாவது: "எந்தத் திருவுருவம் ஒருவரின் உள்ளத்தைக் கொள்ளை கொண்டதோ, அந்தத்திருவுருவத்தையே எந்தத் திருவுருவங்களின் இருதயத்திலும் இருப்பதாகப் பாவனை செய்து வணங்குவாராக" இப்பாவனை மனத்தில் திடம்பெறவரும்போது, ஒவ்வொருவரின் அனுபவத்திலும் ஒரு உண்மை தோன்றும். இதுசொல்லொணுது என்பதோடு ஞானிகள் அடங்கிவிடுகிருர்கள். இந்த மேலான அனுபவம் எல்லோராலும் அடையப்பட வேண்டுமென்பதே எல்லா மகான்களின் விருப்பமுமாகும். இந்த அனுபவம் கைவர நாம் அவசியம் செய்ய வேண்டியது பிரார்த்தனையாகும். இதில் திடநம்பிக்கை எல்லாருக்கும் இருக்கவும் வேண்டும்.

பிரார்த்தனைக்கு மூன்று அம்சங்கள் அல்லது கூறுகள் உள — அவை பூசனை, ஜெபம், தியானம் ஆவன.

**பூசனை** என்பது ஒரு திருவுருவத்தைக் கிரியா பூர்வமாக அதாவது அபிடேகம், சாத்துப்படி, அர்ச்சனை தீபாராதனை முதலியவற்ருல் உபசரித்தல். திருக்கோவில்களில் அர்ச்சகர்கள் இந்த உபசாரணைகளைச் செய்யும்போது பிரார்த்தனை செய்வோர் மனம் வேறு விடயங்களில் பற்றின்றி, இந்த உபசாரணைகளையே அவதானித்தல் வேண்டும். ஒரு பத்தி இருக்கும் பட்சம் இப்பாவனைதானே இவற்றைச் செய்தாலன்ன பலன் நல்கும்.

**ஜெபம்** என்பது ஒரு திருவுருவத்தின் நாம மகிமைகளை உரக்கவோ, கடுத்தரமாகவோ, மென்மையாகவோ அல்லது நாக்கு அடியோடு அசையாவண்ணமோ உருப்போடுதலாகும். நாக்கு அசையாவண்ணம் உருச்சொல்லுதலே மேலானபலனைத் தரும். ஆனல் இது ஒருவருக்கு எளிதில் கைகூடமாட்டாது நீண்ட நாட்கள் பக்திப்பெரும் கூட்டங்களில் பழகிப் பழகி மனம் அமைதி அடையும் எல்லையிலேயே இது ஒருவருக்குக் கைகூடும்.

**தியானம்** என்பது குரங்குபோல் எப்போதும் அலைந்து திரியும் மனம் ஒரு திருவுருவத்தைத் தனக்குப் பற்றுக் கோடாகப் பற்றப் பழக்குதல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலே சொன்ன முக்கூற்றுப் பிரார்த்தனையினால் திரிகரண சுத்தி கிடைக்கும்:

பூசனையினால் இறைவன் திருமேனியை உபசரிக்கவே, ஒருவரின் உடம்பு தூய்மை அடைகிறது. இதுவே காய சுத்தி.

பஜனையினால் இறைவனை பஜிக்கவே அல்லது வாயார வழுத்தவே! ஒருவரின் வாக்கு தூய்மை அடைகிறது. இதுவே வாக்குச் சுத்தி.


தியானத்தினால் இறைவனைச் சிந்திக்கவே, ஒருவரின் மனம் தூய்மை அடைகிறது. இதுவே மானச சுத்தி —

கோவில் வழிபாடு முறையாகச் செய்யப்படின் இத்திரிகரண சுத்தி ஒருவருக்கு சுலபமாய்க் கிடைக்கும். இதுகைகூட பிரார்த்தனை செய்வோர் கடைப்பிடிக்க வேண்டிய மிக முக்கிய விடயம் ஒன்றுண்டு. அதுவே, பேதபுத்தியை, வேற்றுமை உணர்வினை ஒழிக்க முயலுதலாகும். யார்யார் வேற்றுமை உணர்வினை ஒழிக்க முயலுகிறார்களோ, அவர்களே இறைவனை அடையும் பாதையில் சென்றுகொண்டிருக்கிறார்களென்று திடமாய்க் கூறலாம்.

தற்காலம் கோவில் வழிபாட்டைச் சிறப்புறச் செய்யப் பல பேரறிஞர்கள் கூட்டுப் பிரார்த்தனையை ஒரு முக்கிய கூறாகக் கொண்டுள்ளார்கள். இன்று அநேக திருக்கோவில்களில் கூட்டுப் பிரார்த்தனைகள் நடைபெறுகின்றன. கூட்டுப் பிரார்த்தனைகள் எத்தனையோ இல்லங்களிலும் நடைபெறுகின்றன. எத்தனையோ கூட்டுப் பிரார்த்தனைச் சுவடிகளும் வெளிவந்துள்ளன. இவையெல்லாம் எங்கள் சமய வளர்ச்சிக்கும், மக்களின் ஆன்ம ஈடேற்றத்திற்கும் அறிகுறிகளாவனவாகும். கூட்டுப் பிரார்த்தனைகளினால் ஒருபெரும் சக்தி எங்களிடையே பரவுகிறது. கூட்டுப் பிரார்த்தனையில் ஈடுபடுவோர் யாவரும் ஏகோபித்து அதாவது ஒருமை மனப்பான்மையுடன் இறைவனை வழுத்தும்போது அபாரமான சக்தி அலைகள் தோன்றத்தானே வேண்டும். ஒரு அமர்க்களத்தில் ஒருபெரும் படை எவ்வாறு வீராவேசத்தோடு போர் முழக்கம் செய்து வெற்றிமாலை சூடுகிறதோ, அதேபோல் பக்தர் பலர் ஒருங்குகூடி முழக்கும் இறைவன் திருநாமங்கள், அருட்பாடல்கள் பிரபஞ்சப்போரில் அடியார்களுக்கு வெற்றி கொடுக்காது விடுமா! இப்பிரபஞ்சப்போரில், புத்திக்கிலேசமும், காயக்கிலேசமும் அடியோடு ஒழிக்கவே, நாம் இம்மேன்மையான மனுடப்பிறவி எடுத்திருக்கிறோமல்லவா! இதனை நாம் என்றும் ஞாபகத்தில் வைத்துக்கொள்ளல் வேண்டும். எங்கள் வாழ்நாளில் கடவுளை நாம் அடையாவிட்டாலும், எங்கள் உயிர் நீங்கும் வேளைகளிலாவது "கணேசா, முருகா, தாயே, பரந்தாமா, சிவா" என்று சொல்ல வல்ல திடம் நாம் பெற்றிருத்தல் வேண்டும். இது நியமமாகச் செய்யும் பிரார்த்தனைகளினால் ஒருவருக்கு மிக எளிதில் கிடைக்கும்.

கூட்டுப்பிரார்த்தனைகளில் பூசனை, ஜெபம், தியானம் இவற்றினோடு எங்கள் அருட்செல்வர்கள் நமக்குப் பெருநிதியாகக் கொடுத்து வைத்துள்ள திருப்பாடல்களையும் ஓதல் வேண்டும். தமிழ்மொழியிலிருக்கும் அருட்பாடல்கள்போன்று வேறெந்த மொழியிலும் பொருட்செறிவு வாய்க்கப் பெற்ற பாடல்கள் இல்லை என்றே சொல்லலாம். இவ்வளவில் நாம் பெரும் பாக்கியசாலிகளே. இப்பெரும் பாக்கியத்தை நாம் அனுபவிக்க வேண்டாமா? ஆனால் எங்கள் வாழ்நாளில் எத்தனை பேர் இவற்றை முழுதும் அனுபவித்தார்கள் என்பதும் சந்தேகமே! ஆக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தீர்த்த முகூர்த்தமும் - அடியார் கூட்டமும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தினம்தோறும் நிகழும் கதாப்பிரசங்கம்



வீதிவலத்தில் பஜனைக் கோஷ்டி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேமுழுதும் நாம் அனுபவிக்க முடியா விட்டாலும் ஒரு சிலவற்றையேனும் அனுபவிப்போமாக. இந்நோக்கத்துடன் சில திருப்பாடல்கள் தொகுத்துள்ளோம். அன்பர்கள் இவற்றைப் பொருளுணர்ந்து ஒருமை மனதுடன் படித்துப் பயனடைவார்களாக.

இப்பாடல்கள் எல்லாம் இறைவன் திருவுருவங்களை எங்கள் உள்ளத்திரையில் நன்கு படியச் செய்கிறது. இதனால் கூட்டுப் பிரார்த்தனைகளின் பலனைச் சிறப்பாக அடைகிறோம். கூட்டுப்பிரார்த்தனையின் பெருநோக்கம் முதலில் இறைவனைச் சகல கல்யாணகுணங்களுடன் ஒரு திருவுருவத்தில் திடமாகக் காண்பது. இது ஒரு நிலைக்கண்ணாடி முன் எங்கள் உருவத்தைக் காண்பது போன்றது. நிலைக்கண்ணாடிக்குளிருக்கும் உருவத்துக்கு உண்மைகொடுத்தது எம் உருவம். அதே போன்றுதான் திருவுருவத்திற்குத் தோற்றம் அளித்தது எங்கள் இதயத்துள் அறிவுக்கறிவாயிருக்கும் இறைவன். ஆகவே திருவுருவ வழிபாட்டை அந்தர் முகமாக அதாவது எங்கள் உள்ளுக்குள் இருப்பதாகக் காண முயலல் வேண்டும். "கடவுள்" என்ற சொல்லுக்குப் பொருளும் இதுவே. கடவுளை அல்லது இறைவனை எங்கள் உள்ளுக்குள் காண முயலுவதே யோகப்படியாகும். யோகநிலையில் முதிர்ச்சி ஒருவரடைய, அவரின் அனுபவம் மேலும் வளர்கிறது. இது காறும் கோவில்களிலும் எங்கள் இதயங்களிலும் தரிசித்த இறைவனை எல்லா சர, அசரப் பொருள்களிலும் நடமாடுகிறது என்னும் மேலான உண்மை நிலையை அடைகிறார். இந்நிலையே பராபக்தி அல்லது சன்மார்க்கம் என்று அறிஞர் சொல்லுகிறார்கள். இந்நிலையை அடைந்தே மணிவாசகனார் "உலகுக்கு உயிராவாய்" என்னும் வாக்கியத்தை அருளியிருக்கிறார்கள். இந்நிலையை அடைந்தோரே திடமான சித்த புருடர். இவர்களே "உரு ஏறத் திரு ஏறும்" என்னும் மகா வாக்கியத்தை அனுபவித்தவர்கள். இவர்களே அற்புதம் செய்ய வல்லவர்கள் ஆவர். நாயன்மார், ஆழ்வார்கள்; குமரகுருபரர், அருணகிரியார், தாயுமானவர், இராமலிங்கர் இராமகிருஷ்ணபரமகம்சர், பாம்பன் சுவாமிகள் முதலியோர் நாம் மேலே கூறிய எல்லாப் படிகளையும் கிரமமாகத் தரிசித்துச் சித்தபுருடர்களானவர்கள். இவர்கள் எல்லோரும் எங்களையும் அப் பெருநிலைக்குக் கூவியழைக்கிறார்கள். இவர்கள் அழைப்பே இன்றும் என்றும் எங்கும் கூட்டுப் பிரார்த்தனைகளாகத் திகழ்கிறது.

கூட்டுப் பிரார்த்தனையினால் இன்று காந்தி அடிகள் சாதித்தற்கரிய கொள்கையைச் சாதித்து வெற்றியடைந்ததையும் நாங்கள் நன்கு அறிந்திருக்கிறோம். ஆகவே கூட்டுப் பிரார்த்தனை எல்லோரையும் ஒருங்கு சேர்ப்பதாகுக! கூட்டுப்பிரார்த்தனை எங்கும் ஓங்குவதாகுக! எல்லோரும் நன்கு நினைத்து நலன் பெறுவதாகுக! எல்லா உயிர்களும் இன்புற்று வாழ்வதாகுக!

## கூட்டுப் பிரார்த்தனைப் பாடல்கள்.

ஓம்
திருச்சிற்றம்பலம்.

### விநாயக வழிபாடு.

ஜெயகணேச ஜெயகணேச ஜெயகணேச பாகி
ஸ்ரீகணேச ஸ்ரீகணேச ஸ்ரீகணேச ரட்சமாம்.[மாம்

ஐந்து கரத்தனை ஆனை முகத்தனை
இந்திரன் இளம்பிறை போலும் எயிற்றனை
நந்தி மகன்றனை ஞானக் கொழுந்தினைப்
புந்தியில் வைத்தடி போற்றுகின்றேனே. (1)

திருவாக்கும் செய்கருமங் கைக்கூட்டும் செஞ்சொற்
பெருவாக்கும் பீடும் பெருக்கும் — உருவாக்கும்
ஆதலால் வானோரும் ஆனை முகத்தானைக்
காதலாற் கூப்புவர்தங் கை. (2)

## முருக வழிபாடு.

குருபரா குகா சண்முகா வெற்றிவேலா வா வா
வள்ளி தெய்வயானை மருவும் மயில்முருகா வா வா

சிந்திக்கி லேனின்று சேவிக்கி
லேன்தண்டைச் சிற்றடியை
வந்திக்கு லேனொன்றும் வாழ்த்துகி
லேன்மயில் வாகனனைச்
சந்திக்கி லேன்பொய்யை நிந்திக்கி
லேனுண்மை சாதிக்கிலேன்
புந்திச்கி லேசமுங் காயக்கி
லேசமும் போக்குதற்கே. (1)

உருவாய் அருவாய் உளதாய் இலதாய்
மருவாய் மலராய் மணியாய் ஒளியாய்
கருவாய் உயிராய்க் கதியாய் விதியாய்க்
குருவாய் வருவாய் அருள்வாய் குகனே. (;

அகரமு மாகி அதிபனு
மாகி அகமாகி
அயனென வாகி அரியென வாகி
அரனென வாகி அவர்மேலாய்
இகரமு மாகி எவைகளு மாகி
இனிமையு மாகி வருவோனே
இருநில மீதில் எளியேனும் வாழ
எனது முன்ஓடி வரவேணும்
மகபதி யாகி மருவும்வ லாரி
மகிழ் ளி கூரும் வடிவோனே
வனம்உறை வேடன் அருளிய பூசை
மகிழ் கதிர்காமம் உடையோனே
செககண சேகு தகுதிமி தோதி
திமியென ஆடும் மயிலோனே
திருமலி வான பழமுதிர் சோலை
மலை மிசைமேவு பெருமாளே.

## விஷ்ணு வழிபாடு.

ஹரே ராம ஹரே ராம
ராம ராம ஹரே ஹரே
ஹரே கிருஷ்ண ஹரே கிருஷ்ண
கிருஷ்ண கிருஷ்ண ஹரே ஹரே.

பச்சைமா மலைபோல் மேனி
பவளவாய் கமலச் செங்கண்
அச்சுதா அமரர் ஏறே
ஆயர்தம் கொழுந்தே என்னும்
இச்சுவை தவிர யான் போய்
இந்திர லோகம் ஆளும்
அச்சுவை பெறினும் வேண்டேன்
அரங்கமா நகர் உளானே. (1)

வேதநூல் பிராயம்நூறு
மனிசர்தாம் புகுவரேனும்
பாதியும் உறங்கிப்போகும்
நின்றதில் பதினையாண்டு
பேதைபா லகனதாகும்
பிணிபசி மூப்புத்துன்பம்
ஆதலால் பிறவிவேண்டேன்
அரங்கமா நகர்உளானே. (2)

## சக்தி வழிபாடு.

ஓம்சக்தி ஓம்சக்தி ஓம்சக்தி ஓம்
ஆதிசக்தி மகாசக்தி பராசக்தி ஓம்.

பூரணி புராதனி சுமங்கலை சுதந்தரி
புராந்தகி திரியம்பகி எழில்
புங்கவி விளங்குசிவ சங்கரி சகஸ்ரதள
புஷ்பமிசை வீற்றிருக்கும்
நாரணி மனாதீத நாயகி குணாதீத
நாதாந்த சத்தியென்றுன்
நாமமே உச்சரித் திடுமடியர் நாமமே
நானுச்ச ரிக்கவசமோ
ஆரணி சடைக்கடவுள் ஆரணி எனப்புகழ்
அகிலாண்ட கோடியீன்ற
அன்னையே பின்னையும் கன்னியென மறைபேசும்
ஆனந்த ரூபமயிலே
வாரணியும் இருகொங்கை மாதர்மகிழ் கங்கைபுகழ்
வளமருவு தேவையரசே
வரைராச னுக்கிருகண் மணியாய் உதித்தமலை
வளர்காத லிப்பெணுமையே. (1)

சர்வ மங்கள மாங்கல்யே சிவே
சர்வார்த்த சாதிகே
சரண்யே திரியம்பகே கௌரீ
நாராயணீ நமஸ்துதே.

ஸ்ருஷ்டி ஸ்திதி விநா சாநாம்
சக்திபூதே சநாதனே
குணாஸ்ரயே குணமயே
நாராயணீ நமஸ்துதே.

சரணாகத தீனார்த்த
பரித்ராய பராயணே
சர்வ ஸ்யார்த்தி ஹரேதேவி
நாராயணீ நமஸ்துதே. (9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிவ வழிபாடு.

சிவாய நமஓம் சிவாயநமஹ
சிவாய நமஓம் நமச்சிவாய.

தோடுடைய செவியன் விடையேறி ஓர்
தூவெண் மதிசூடிக்
காடுடைய சுடலைப் பொடிபூசி என்
உள்ளம் கவர் கள்வன்
ஏடுடைய மலரான் முனைநாட் பணிந்து
ஏத்த அருள் செய்த
பீடுடைய பிரமா புர மேவிய
பெம்மான் இவனன்றே. (1)

கூற்று யினவாறு விலக்ககிலீர்
கொடுமை பலசெய் தனநான் அறியேன்
ஏற்றாய் அடிக்கே இரவும் பகலும்
பிரியாது வணங்கு வன் எப்பொழுதும்
தோற்றது என் வயிற்றின் அகம்படியே
குடரோடு துடக்கி முடக்கி யிட
ஆற்றேன் அடியேன் அதிகைக் கெடில
வீரட் டானத் துறை அம்மானே. (2)

பித்தா பிறைசூடி
பெருமானே அருளாளா
எத்தான் மறவாதே
நினைக்கின்றேன் மனத்துன்னை [னைய்
வைத்தாய்பெண் ணைத்தென்பால்வெண்
நல்லூர் அருட்டுறையுள்
அத்தா உனக்காளா யினி
அல்லேன் எனலாமே. (3)

உடையாள் உன்தன் நடுவிருக்கும்
உடையாள் நடுவுள் நீஇருத்தி
அடியேன் நடுவுள் இருவீரும்
இருப்பதானல் அடியேன் உன்
அடியார் நடுவுள் இருக்கும்
அருளைப்புரியாய் பொன் அம்பலத்து
முடியா முதலே என்கருத்து [எம்
முடியும் வண்ணம் முன்னின்றே. (4)

ஒளிவளர் விளக்கே உலப்பிலா ஒன்றே
உணர்வுசூழ் கடந்ததோர் உணர்வே
தெளிவளர் பளிங்கின் திரள்மணிக் குன்றே
சித்தத்துள் தித்திக்குந் தேனே
அளிவளர் உள்ளத்து ஆனந்தக் கனியே
அம்பலம் ஆடரங் காக
வெளிவளர் தெய்வக் கூத்துஉகந் தாயைத்
தொண்டனேன் விளம்புமா விளம்பே. (5)

அன்பும் சிவமும் இரண்டுஎன்பர் அறிவிலார்
அன்பே சிவமாவது யாரும் அறிகிலார்
அன்பே சிவமாவது யாரும் அறிந்தபின்
அன்பே சிவமாய் அமர்ந்திருந் தாரே. (6)

கூறுமின் ஈசனை செய்ம்மின் குற்றேவல்
குளிர்மின் கண்கள்
தேறுமின் சித்தம் தெளிமின் சிவனை
செறுமின் செற்றம்
ஆறுமின் வேட்கை அறுமின் அவலம்
இவை நெறியா
ஏறுமின் வானத்து இருமின் விருந்தாய்
இமைய வர்க்கே. (6)

ஐந்துபேர் அறிவும் கண்களே கொள்ள
அளப்பரும் கரணங்கள் நான்கும்
சிந்தையே ஆகக் குணம்ஒரு மூன்றும்
திருந்து சாத்விகமே ஆக
இந்துவாழ் சடையான் ஆடும் ஆனந்த
எல்லையில் தனிப்பெருங் கூத்தின்
வந்தபேர் இன்ப வெள்ளத்துள் திளைத்து
மாறிலா மகிழ்ச்சியில் மலர்ந்தார். (7)

அருட்சோதித் தெய்வமெனை
ஆண்டுகொண்ட தெய்வம்
அம்பலத்தே ஆடுகின்ற
ஆனந்தத் தெய்வம்
பொருட்சாரு மறைகளெல்லாம்
போற்றுகின்ற தெய்வம்
போதாந்தத் தெய்வம்உயர்
நாதாந்தத் தெய்வம்
இருட்பாடு நீக்கிஒளி
ஈந்தருளுந் தெய்வம்
எண்ணியநான் எண்ணியவா
றெனக்கருளுந் தெய்வம்
தெருட்பாடல் உவந்தெனையுஞ்
சிவமாக்கும் தெய்வம்
சிற்சபையில் விளங்குகின்ற
தெய்வமதே தெய்வம். (8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அகில உலகின் உயிர்கள் சேமமுற வேண்டும் வழிபாடு.

வாழ்க அந்தணர் வானவர் ஆனினம்
வீழ்க தண்புனல் வேந்தனும் ஓங்குக
ஆழ்க தீயதெல்லாம் அரன் நாமமே
சூழ்க வையகமுந் துயர் தீர்கவே. (1)

கருணையிலா ஆட்சி கடுகி ஒழிக
அருள்நயந்த நன்மார்க்கர் ஆள்க—தெருள்நயந்த
நல்லோர் நினைத்த நலம்பெறுக நன்றுநினைத்து
எல்லோரும் வாழ்க இசைந்து. (2)

## சோதி வழிபாடு.

### தீப ஆராதனையுடன் எல்லோரும் ஒருமித்துச் சொல்லுதல்.

### அருட்பெருஞ் சோதி.

சோதி சோதி சோதி சுயம்
சோதி சோதி சோதி பரம்
சோதி சோதி சோதி அருள்
சோதி சோதி சோதி சிவம். (1)

வாமசோதி சோமசோதி வானசோதி ஞானசோதி
மாகசோதி யோகசோதி வாதசோதி நாதசோதி
ஏமசோதி வியோமசோதி ஏறுசோதி வீறுசோதி
ஏகசோதி ஏகசோதி ஏகசோதி ஏகசோதி
ஆதிநீதி வேதனே ஆடல்நீடு பாதனே
வாதிஞான போதனே வாழ்கவாழ்க நாதனே.

அருட்பெருஞ்சோதி அருட்பெருஞ்சோதி
தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்சோதி.

## குரு வழிபாடு.

சற்குரு நாதா சற்குரு நாதா
சன்மார்க்க சங்கம் தழைக்க அருள் தாதா.

கல்லானின் புடையமர்ந்து நான்மறைஆறு
அங்கம்முதற் கற்றகேள்வி
வல்லார்கள் நால்வருக்கும் வாக்கிறந்த
பூரணமாய் மறைக்கப்பாலாய்
எல்லாமாய் அல்லதுமாய் இருந்ததனை
இருந்தபடி இருந்துகாட்டிச்
சொல்லாமற் சொன்னவரை நினையாமல்
நினைந்துபவத் தொடக்கைவெல்வாம். (1)

தந்தைதாய் ஆவானும் சார்கதி இங்குஆவானும்
அந்தம்இலா இன்பம்நமக்கு ஆவானும் எந்தம்உயிர்
தான்ஆகு வானும்சரண் ஆகுவானும் அருள்
கோன் ஆகு வானும் குரு. (2)

## மங்களம்.

ஆற்றல்கள் அனைத்தும் நீயே
அருளுவாய் எமக்கும் ஆற்றல்
போற்றிடும் வீரியம் நீ
எமக்கதைப் புகட்ட வேணும்
மாற்றரும் பலங்கள் நீயே
மற் றெமைப் பலவானுக்கு
சாற்றரும் ஜீவ சத்தே
சத்தினை எமக்குத் தாராய். (1)

தீமையை வெறுத்து நீக்கும்
தீரமாய்த் திகழ்வாய் நீயே
வாய்மையில் எமக்கும் அந்த
வலிமையை வழங்க வேண்டும்
தாய்மையின் சகிப்பு நீயே
தந்தருள் சகிப்புத் தன்மை
தூய்மைசேர் ஒழுக்க வாழ்வில்
துலங்கிடும் ஆன்ம சோதி. (2)

உடலினும் உயிருக் கப்பால்
உயர்ந் தொளிர் ஆன்மசக்தி
கடலினும் பெரிதாம் உன்தன்
கருணையில் மூழ்கச் செய்வாய்
அடைவரும் அமைதி தந்து
அன்பெனும் அமுதம் ஊட்டி
மடமைகள் யாவும் மாற்றி
மங்களம் அருள்வாய் போற்றி. (3)

## வாழ்த்தொலி

தென் நாடு உடைய சிவனே போற்றி
எந் நாட்டவர்க்கும் இறைவா போற்றி.
சித்தமும் செல்லாச் சேட்சியன் காண்க
பத்தி வலையில் படுவோன் காண்க
குவளைக் கண்ணி கூறன் காண்க
அவளும் தானும் உடனே காண்க
அண்ணாமலை எம் அண்ணா போற்றி
கண்ணார் அமுதக் கடலே போற்றி
ஏகம்பத் துறை எந்தாய் போற்றி
பாகம்பெண் உரு ஆனாய் போற்றி
பராய்த் துறை மேவிய பரனே போற்றி
சிராப் பள்ளி மேவிய சிவனே போற்றி.

நமப் பார்வதீ பதையே — அரகர மகா தேவா
சிற் சபேசா — சிவ சிதம்பரம்
ஸ்ரீவல்லீ காந்த ஸ்மரணே — சிவ சுப்பிரமணியம்
ஸ்ரீலெட்சுமீ காந்த ஸ்மரணே — ஜெய ஜெய ராம்
கோவிந்தநாமசங்கீர்த்தனம்-கோவிந்தாகோவிந்தா

**திருச்சிற்றம்பலம்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாதேவர்க்கு ஏகாந்தராகும் வழி.

(ஐயாறன்)

"மாதேவர்க்கு ஏகாந்தர் அல்லராகில், சங்கநிதி பதுமநிதி இரண்டும் தந்து, தரணியொடு வானளைத் தருவரேனும், மங்குவார் அவர் செல்வம் மதிப்போமல்லேம்"

என்பது ஆழிமிசை கல்மிதப்பில் அணைந்த பிரானை திருநாவுக்கரசரின் திருவாக்கு.

எல்லாச் செல்வங்களையும் விடவும் மண்ணக, விண்ணக ஆட்சிப்பேற்றை விடவும், தேவாதி தேவனை இறைவனுடனே ஏகாந்தமாக இருப்பதே பெரும் பேறுகுமென்று இதன்மூலம் அப்பர் சுவாமிகள் அறிவுறுத்துகின்றார். நம்மில் பலரும் பொருட்செல்வங்களையும், பதவிகளையும் தேடுவதிலே நமது வாழ்க்கையில் பெரும்பகுதியைக் கழிக்கின்றோம். இறைவனுடனே ஏகாந்தமாக இருந்து அவர் கூறுவதைக் கேட்க நம்மில் எவ்வளவு பேருக்கு நேரமோ அல்லது பொறுமையோ உண்டு? செல்வங்களோ ஆட்சி அதிகாரங்களோ கூடாதென்பது அப்பரின் கருத்தன்று. ஆனல் இவற்றை எல்லாம்விட மாதேவர்க்கு ஏகாந்தமாக நாம் இருக்கவேண்டுமென்பதையே, நமக்கு இடித்துச் சொல்லுகின்றார்.

மாதேவர்க்கு ஏகாந்தரென்றால் என்ன? அந்த நிலையை எப்படி அடைவது? நாம் அடையமுடியுமா? என்பன முக்கியமான கேள்விகள். மேற்குறித்த திருத்தாண்டகத்தின் அடுத்த அடியிலேயே **"மாதேவர்க்கு ஏகாந்தர்"** என்பதற்கு விளக்கம் தந்திருக்கின்றார். "கங்கைவார் சடைக் கரந்தார்க்கு அன்பராகவேண்டுமென்று அவ்விதம் அன்புடையவர், அங்கமெலாம் குறைந்தழுகு தொழுநோயராய் ஆவுரித்துத் தின்றுழலும் புலையராக இருப்பினும்கூட, அவரே நாம் வணங்கும் கடவுள்" என்றும் பறை சாற்றுகின்றார்.

## எல்லா உயிர்களிடமும்:

கங்கைவார் சடைக்கரத்தார் எங்கே இருக்கிறார்? அவர் மீது எப்படி அன்பு செலுத்துவது என்ற கேள்விகள் உடன் நம் மனத்தில் எழுகின்றன. எல்லா உயிர்களுக்கும் உயிராக எங்கும் நிறைந்திருக்கின்றார். என்றும் நம்மைச் சுற்றி நாம் காணும் ஆண், பெண் வடிவங்களெல்லாம் சிவ, சக்தி வடிவங்களே என்றும் திருவையாற்றிலே கண்ட கைலாசக் காட்சியை அவர் விளக்குகின்றார். **"காதல் மடப்பிடியோடும் களிறு வருவனக் கண்டேன். கண்டேன் அவர் திருப்பாதம் கண்டறியாதனக் கண்டேன்"** என்ற பதிகம் எங்கும் அவர் இறைவனைக் கண்ட காட்சியை விளக்குகின்றது. ஆகவே இறைவனிடம் கங்கைவார் சடைக்கரந்தானிடம் அன்பராக நாம் இருக்க வேண்டுமாகில், நாம் எல்லா உயிர்களிடத்தும் அன்புடையவர்களாக இருக்கவேண்டுமென்பது ஏற்படுகின்றது. "மாதர் பிறைக்கண்ணியானை ........" என்ற தேவாரத்தைப் பண்ணுடன் பாடிவிட்டு, உயிர்களிடத்தில் நமக்கு அன்பு இல்லாமற் போயின், நம்மையே நாம் நேசித்துக்கொண்டிருப்பின் பயனுண்டா?

## இறைவனின் குழந்தைகள்:

பிறரிடம் நமக்கு அன்பு சுரப்பதென்பது சுலபமல்ல. நாம் வணங்கும் இறைவன் எல்லா உயிர்களிலும் இருக்கின்றான் என்ற நினைவு எப்போதும் அகலாமல் இருந்தாலே, நாமெல்லோ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நும் இறைவனின் குழந்தைகள், அவரே நமக்கு அம்மையும் அப்பரும் என்ற எண்ணம் மனதில் ஊறியிருந்தாலே நம்மைப் போல் பிறரையும் நாம் நேசிக்க முற்படுவோம். நாமனைவரும் இறைவனின் குழந்தைகள் என்ற எண்ணம் உண்மையில் நமக்கு ஏற்பட்டுவிட்டால், நமக்கிடையேயுள்ள வேற்றுமைகளெல்லாம் கரைந்து மறைந்துவிடும். ஒருவருக்கு ஒருவர் உதவியாக வாழ்வோம்.

நாம் இறைவனின் உண்மையான பக்தர்களாயின், எல்லா உயிர்களிடமும் பூரண அன்பு காட்டவேண்டும். ஏனெனில் கடவுள் எல்லா உயிர்களிலும் குடிகொண்டிருக்கின்றார். அவன் அன்றி ஓரணுவும் அசையாது. எல்லா உயிர்களிலும், பிராணிகளிலும் தன்னைக்கண்டு, எந்தப் பக்தன் அன்பு செலுத்துகின்றானோ அவனே தனக்கு மிக உகந்தவனென்கின்றார் பகவான். யாராவது ஒருவர் தனக்குக் கடவுள் மீது அன்புண்டென்றும், ஆனால் மற்ற மக்களிடம் அன்பில்லை என்றும் கூறுவதாயின், அது பொய்வார்த்தையாகும்.

**பக்தனுக்கு அடையாளம்:**

தெய்வத்திடம் உண்மையான அன்பு நமக்கு உள்ளதா? என்பதற்கு அடையாளமுண்டு. மற்ற மக்களிடம் உயிர்களிடம் பூரண அன்பு காட்ட வேண்டும். யாராவது துன்பப்பட்டால் அவர்களுக்குக் கருணைகாட்டி உதவ நமது இதயம் அவர்கள்பால் செல்ல வேண்டும். இதில் எவ்வித வேற்றுமைகளையும் நாம் காட்டப்படாது.

சிலர் இருக்கிறார்கள். அவர்கள் தங்கள் சாதி, மதம், இனம், நாடு இவற்றைச் சேர்ந்தவர்களுக்கு மட்டுமே உதவுவார்கள். மற்றவர்களை வேற்றுமைக் கண்ணுடன் பார்ப்பர். அது உண்மை அன்பல்ல. அன்புக்கு அடைக்கும் தாழில்லை. எல்லாரிடமும் வேற்றுமையின்றி அன்பு பெருகவேண்டும். ஏனெனில் நமக்குள் உள்ள ஆத்மாவே, உலகிலே எல்லா உயிர்களிலும் எங்கும் நிறைந்திருக்கின்றது. நாம் குறுகிய மனம் கொண்டு நமது சாதி, சனம், இனம் இவர்களிடம் மட்டும் அன்பு செலுத்தினால், அந்த அன்பு பூரணமானதல்ல. அது மனதாலும், உடலாலும் செலுத்தும் அன்பேயன்றி, உண்மையில் ஆத்மீகமுறையில் செலுத்தும் பூரணஅன்பு ஆகாது. நமது பல சமய குரவர்களும் நமக்குச் செய்துள்ள பெரிய உபதேசம் இதுதான்.

**பேரின்பம்:**

வேற்றுமைகளைக் கடந்து, நமது வாழ்க்கை தெய்வீகமாகாதவரையில், "நான்" என்ற ஆணவமலத்திலிருந்து நாம் விடுதலையடையமுடியாது. நாம் விரும்பும் மோட்சம் அல்லது சிவபெருமானின் திருவடிநிழலை அடைவதற்கில்லை. தெய்வத்தை நம்மிலும் வெளியில் எங்கும் சதா உணருவதால் நமக்கு மாறாத இன்பமும் சாந்தியும் கிடைக்கின்றது. இந்தப் பேரின்பம் நமக்குக் கிடைத்துவிட்டால் சங்கநிதி, பதுமநிதி, மண், விண், ஆட்சி, இந்திரிய சுகபோகங்கள் எல்லாம் மிகமிக அற்பமாகத் தோன்றும்.

**திருநாமம்:**

இவ்வித நிலை அடைய நாம்செய்ய வேண்டியது என்ன? இறைவனின் அருள்பெறவேண்டும். எப்படி? அவனை என்றும் மறவாமல், அவனிடம் அருளையே நாடவேண்டும். அவனை மறவாமலிருக்க வழி, அவனுடைய திருநாமத்தை நாம் இடைவிடாது சொல்லிக்கொண்டிருப்பதுதான். சற்றே இடைவெளி யேற்படின், நம் குரங்குமனம் எங்காவது கொண்டு நம்மைக் கவிழ்த்துவிடலாம். அதனால்தான் "நற்றுணையாவது நமச்சிவாயவே" என்று பாடினார் அப்பர் அடிகள். இறைவனின் திருநாமத்தை நாவில் கொண்டால் அவன்

[17ம் பக்கம் பார்க்க]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






(மேல்) துலாக்காவடி மூலம் தமது நேர்த்திக் கடனைப் பூர்த்தி செய்யும் பக்தரின் தோற்றம்.

(கீழ்) அதே காட்சியின் அண்மைத் தோற்றம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அனுமார்க்காவடி மூலம் தமது நேர்த்திக்கடனை
ஓர் அன்பர் நிறைவேற்றுவதைக் காணலாம்.



தேர்க்காவடி மூலம் தமது நேர்த்திக் கடனை
ஓர் அன்பர் நிறைவேற்றுவதைக் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழத்தின் இந்து சிற்பச் செல்வங்கள்.

கலைப்புலவர்
க. நவரத்தினம்

இலங்கை, இந்து சமயத்திற்கு நிலைக்களமாக மிகப் பண்டைக் காலந் தொட்டே இருந்து வருகிறது. பௌத்தசமயம் இலங்கைக்கு வருமுன் இங்கு வாழ்ந்த தமிழர்களும், சிங்களவர்களும் இந்துக்களாகவே வாழ்ந்தனர். விஜயன் இலங்கைக்கு வந்தவுடன் இந்நாட்டின் நான்கு பக்கங்களிலும் இருந்த இந்து சமய ஆலயங்களைப் புதுப்பித்தான் என்னும் ஓர் கர்ண பரம்பரைக்கதையை மயில்வாகனப்புலவர் தமது யாழ்ப்பாண வைபவமாலை என்னும் நூலிற் கூறுகிறார். மூத்தசிவ, மகாசிவ என்னும் பெயர்களுடைய அரசர்கள் இலங்கையை ஆண்டார்கள் எனக் கூறப்படுவதிலிருந்து சிவவழிபாடு நாட்டில் பௌத்தசமயம் பரவுவதற்கு முன்னிருந்ததெனக் கொள்ளுதற்கிடமுண்டு.

இந்துசமய நூல்களாகிய கந்தபுராணம், இராமாயணம் முதலிய நூல்களில் இலங்கை சம்பந்தமான கதைகளும் வரலாறுகளும் காணப்படுகின்றன. தேவாரத்தில் இராவணன் சிறந்த சிவபக்தனாக மதிக்கப்படுகிறான். இலங்கையிலுள்ள பல சிவஸ்தலங்களோடு இராவணனை தொடர்பு படுத்தியுள்ள வரலாறுகள் மக்களால் இன்றும் கூறப்படுகின்றன.

இலங்கையின் வடபகுதியில் நாகர் என்னும் ஒரு வகுப்பினர் மிகப்பண்டைக்காலம் தொடக்கம் குடியேறிப் பரவியிருந்தனர் என்னும் உண்மை மகாவம்சம் முதலிய பௌத்த சமயவரலாற்று நூல்களிற் காணப்படுகின்றது. நாகர்கள் சிவவழிபாடு உடையோர் என்பது இதிகாச புராணங்களால் அறியக்கிடக்கும் உண்மையாகும். புத்தருக்கு முன் வடநாட்டில் நாகர்கள் செல்வாக்குடன் வாழ்ந்தார்கள்என இந்தியசரித்திர நூல்கள் கூறுகின்றன.

சிவவழிபாட்டையும் முருக வழிபாட்டையும் திராவிடர்களாகிய தமிழர்கள் இந்து சமயத்துக்குக் கொடுத்தார்கள் என்பது இக்கால சரித்திர ஆராய்ச்சியாளர் முடிபு. திராவிடர்களாகிய தமிழர்கள் தென் இந்தியாவையும் இலங்கையையும் தாயகமாகக் கொண்டு வாழ்ந்தார்கள் என்பதும் சரித்திர ஆராய்ச்சியாளர் கூற்று. சிவவழிபாட்டையும் முருக வழிபாட்டையும் பின்பற்றிய தமிழர்கள் இலங்கையில் ஆதிகாலம் தொட்டு வாழ்ந்து வருகிறார்கள் என்பதற்கு அழியாச்சான்றுகள் இலங்கையில் இன்றும் காணப்படும், சிவாலயங்களும் முருகன் ஆலயங்களுமாம். இலங்கையின் நான்கு திக்குகளிலும் பழமையும் பெருமையும் வாய்ந்த சிவாலயங்கள் காணப்படுகின்றன. கிழக்கேயுள்ள கோணேஸ்வரமும் மேற்கேயுள்ள திருக்கேதீஸ்வரமும் தேவாரப் பாடல்பெற்ற தலங்களாகும். வடக்கே

---

[16ம் பக்கத் தொடர்ச்சி]

நினைப்பு நமக்கு மறப்பதில்லை. அவன் திருவருள் கிடைக்கவும், நம்முளிருக்கும் அவனுடன் நாம ஏகாந்தமாகப் பேசி, அவன் கூறுவதை எல்லாம் கேட்டும், அவன் காட்டும் வழியிலேயே செல்லவும், முடிவில் அவனுகவே நாம் ஆகிவிடவும் அவன் திருநாமம் நமக்குத் துணை செய்யக்காத்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யுள்ள நகுலேஸ்வரமும், மேற்கேயுள்ள முனீஸ்வரமும், மாத்தறையிலிருந்த சந்திரசேகரன் ஆலயமும், தெய்வந்துறையிலுள்ள விஷ்ணு ஆலயமும், வன்னிநாட்டிலுள்ள உருத்திரபுரச்சிவாலயமும் சிதாவாக்கையிலிருந்த வைரவாண்டி கோவிலும் சரித்திரப் பெருமைவாய்ந்த ஆலயங்களாகும்.

ஈழநாட்டில் பெருமை வாய்ந்த முருகனாலயங்கள் மிகப்பலவுள. அவற்றுட் சிறந்தன கதிர்காமம், கந்தவனம், குமாரபுரம், திருக்கோயில், யாழ்ப்பாணத்து நல்லூர், மாவிட்டபுரம், செல்வச்சந்நிதி என்பனவாம். பருத்தித்துறைக்கு அணித்தாயுள்ள வல்லிபுரத்திலுள்ள விஷ்ணு ஆலயமும், புன்னாலையிலுள்ள விஷ்ணு ஆலயமும், மிகப் புராதனம் வாய்ந்த ஆலயங்களாகும். இந்துசமயம் நாட்டில் சிறப்புடன் பரவி வளர்க்கப்பட்டதாயினும் இந்து சமய சம்பந்தமான சிற்பப்பொருட்கள் பல இல்லையென்றே கூறுதல் வேண்டும்.

இலங்கையில் தமிழர்கள் பெரும்பாலும் கரையோரமாகவே பரவியிருந்தனர். நாம் மேலே கூறிய திருக்கேதீஸ்வரம், திருக்கோணேச்வரம், முனீஸ்வரம், நகுலேஸ்வரம், கதிர்காமம், திருக்கோயில், தெய்வந்துறை, விஷ்ணு ஆலயம், வல்லிபுரக்கோயில், செல்வச்சந்நிதி, மாவிட்டபுரம் ஆகியன கடற்கரைக்குச் சமீபமாக இருப்பதே நாம் கூறுவதற்குச் சான்றுகளாகும். அந்நிய நாட்டு மககளாகிய போத்துக்கேயர், ஒல்லாந்தர் இலங்கையில் கடலோரப் பகுதிகளையே தமது ஆளுகைக்குள்ளாக்கி, இப்பகுதிகளிலிருந்த இந்து ஆலயங்களை இடிதது அழித்தார்கள் என்பதை சரிததிர மூலம் அறிகின்றோம். இன்று வட ஊவாமாகாணத்திலும் ஏனைய பகுதிகளிலும் காணப்படும் இந்து ஆலயங்கள் பிரித்தானிய அரசாட்சியின்பின் கட்டப்பட்டனவேயாகும்.

தேவநம்பிய தீசன் காலத்தின் பின் ஆண்ட சிங்கள அரசர்கள் எல்லோரும் பௌத்த சமயத்தையே பின்பற்றியதனால் இலங்கையில் பௌத்த சமயமும், பௌத்த கலாச்சாரமுமே சிறப்புற்று வளர்ந்தன. ஆனால், பல்லவ, சோழ, பாண்டிய அரசர்கள் அரசியல் ஆதிக்கம் நாட்டில் ஏற்பட்ட காலங்களில் இந்துசமயமும் பரவியது. இன்று இலங்கையிற் காணப்படும் இந்து சமய சிற்பங்கள் யாவும், பல்லவ காலத்திற்குப் பிற்பட்டனவேயாகும்.

**சைவ ஆலயங்கள்:**

நாலந்தாவிலுள்ள கெதிகை என்னும் சைவசமய ஆலயம் பல்லவர் காலத்தில் அக்காலச் சிற்ப முறையைப் பின்பற்றி அமைக்கப்பட்டது.

சைவசமயத்தை இலங்கையில் சிறப்புடன் வளர்த்த அரசர்கள் சோழர்களேயாவர். முதலாம் இராஜராஜன் பொலனறுவாவில் வானவன் மாதேவி, ஈஸ்வர முடையார் என்னும் பெயர் கொண்ட ஒரு சிவாலயத்தைக் கட்டினான். இவ்வாலயம், கர்ப்பக் கிருகம், விமானம், அந்தராளம் அர்த்த மண்டபம், ஆகிய அங்கங்களுடன் இன்றும் இருக்கிறது. சோழருக்குப் பின் வந்த முதலாம் பராக்கிரமவாகுவும், பிற அரசர்களும் பொலனறுவாவில் அமைத்த பௌத்த ஆலயங்களில் காணப்படும் அலங்காரச் சித்திரங்கள் யாவும், வானவன், மாதேவி, ஈசுவரமுடையார் ஆலயத்தைப்போன்றவையேயாம். இலங்கையில் காணப்படும் மிகப் பெரிய பழைய கருங்கற் சிவாலயம் இதுவேயாகும். சோழச் சிற்ப முறைக்கு எடுத்துக்காட்டாக இலங்கையில் இவ்வாலயமே விளங்குகின்றது.

முதலாம் சிவாலயம் என்னும் பெயருடன் பொலனறுவாவிலுள்ள கோவில் கோட்டத்திற்கருகில் ஒரு கருங்கற் சிவாலயம் காணப்படுகின்றது. இவ்வாலயம் பழுதடைந்த நிலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யில் காட்சியளிக்கின்றது. ஆனல், இவ்வாலயத்தின் சிற்ப வேலை வானவன், மாதேவி, ஈசுவரமுடையார் சிவாலயமாகிய இரண்டாம் சிவாலயத்திலும் பார்க்கச் சிறப்பும், கலை வனப்பும் வாய்ந்தது. இது பாண்டிய சிற்பமுறையில் அமைந்துள்ளதென அநுமானிக்கப்படுகின்றது. இதன் காலம், 13 ம் நூற்றாண்டாதல் வேண்டும்.

மட்டக்களப்பைச் சேர்ந்த திருக்கோயில் என்னும் கிராமத்திலுள்ள முருகன் ஆலயம் சரித்திரச் சம்பந்தமுடையது. இதன் சிற்பம் பிற்காலச் சோழர் அல்லது பாண்டியற்கு, சிற்ப முறையைப் பின்பற்றியதாகக்காணப்படுகின்றது. பல இந்து ஆலயங்கள் நாட்டிற் பல பாகங்களிலும் இருக்திருப்பினும் நாம் மேலே எடுத்துக் கூறிய ஆலயங்கள் மாத்திரமே சரித்திரத் தொடர்புடைய சைவச் சிற்பச் செல்வங்களாக விளங்குகின்றன.

**சைவ சிற்ப வடிவங்கள்:**

இலங்கையில் கல்லிலும் செம்பிலும் செய்யப்பட்ட பல சைவத் திருவடிவங்கள் காணப்படுகின்றன. இலங்கையில் சிற்பச் சிறப்பு வாய்ந்த சைவக் கல் வடிவங்கள் எதுவும் அகப்படவில்லை. சமயத் தொடர்பில்லாத இரண்டு கல்வடிவங்கள் அனுராதபுரத்திலுள்ள ஈசுவர முனிய விகாரையில் காணப்படுகின்றன. அவற்றில் ஒன்று 'தம்பதிகள்' எனப்படும். மற்றொன்று 'கபிலரை'க் குறிக்கின்றதெனக் கருதப்படுகின்றது. தம்பதிகளைக் குறிக்கும் சிற்பம் குப்த சிற்ப முறையில் அமைந்துள்ளது. கபிலரைக் குறிக்கும் சிற்பம் பல்லவமுறையில் அமைந்துள்ளது. இவ்விரு சிற்பங்களும் இலங்கையிலுள்ள வனப்பு வாய்ந்த பிறவடிவங்களோடு வைத்து மதிக்கத்தக்கன. இவ் வடிவங்களைப் பிறநாட்டுக் கலாரசிகர்கள் பலர் பாராட்டி உள்ளனர்.

இலங்கையிற் காணப்பட்ட சைவ வெண்கலத் திருவடிவங்கள் உலகப் பிரசித்தி பெற்றவை. இவைகளை பொலனறுவாச் சிற்ப வடிவங்கள், திருகோணமலைச் சிற்ப வடிவங்கள் இருளன பிரிவாக ஆராயலாம். கொழும்பு நூதன பொருட்காட்சிச் சாலையிற் காணப்படும் நடராஜ வடிவங்களும், பார்வதியின் வடிவங்களும், சமயாசாரியர் நால்வரது வடிவங்களும், சணடேஸ்வர நாயனர் வடிவமும், சந்தியாகிர்த்தமூர்த்தியின் நிர்த்தனநிதி உத்னர் வடிவமும், பொலனறுவாவிலுள்ள சிவாலயங்களில் காணப்பட்டவை. திருவாசியுடனும், எல்லா அங்க இலட்சணங்களுடனும் ஒரு நடராஜ வடிவம் அங்கிருக்கின்றது. இவ் வடிவம் ஆகமங்களிற் கூறப்பட்ட பிரமாணங்களுக்கு அமையச் செய்யப்பட்டிருப்பினும், கலை வனப்புப் பொருந்தியதாகக் காணப்படவில்லை.

சைவ நாயன்மார்களது வடிவங்களுட் சிறந்தது சுந்தரமூர்த்தி சுவாமிகளின் வடிவமேயாகும். இறைவன் பக்தியில் ஈடுபட்டுள்ள உண்மை அடியார்களின் உள்ளமும் உடலும் எத்தன்மை பெற்று விளங்கும் என்பதை ஒருவர் இத் திருவடிவத்தின் மூலம் நன்கு அறிந்துகொள்ளலாம். பக்திப் பிரேமையின் ஒப்பற்ற நிலையைச் சண்டேஸ்வரரது வடிவத்தின்மூலம் நன்கு அறியலாம். உலகத்திலுள்ள சிறந்த கலை வடிவங்களில் சுந்தரமூர்த்தி திருவடிவமும் ஒன்றென்பது கலைப்புலவர் பலரின் கருத்தாகும். இவ்வடிவம் இலங்கையிற் காணப்படுவது நமக்கெல்லாம் ஒரு தனிப்பட்ட பெருமையையும் மகிழ்ச்சியையும் அளிக்கின்றதெனக் கூறுதல் மிகையாகாது. சைவசமயாசாரிய சுவாமிகளாகிய சம்பந்தர், அப்பர், சுந்தரர், மாணிக்கவாசகர் ஆகிய நால்வரின் வடிவங்களும், சைவ மக்களுக்குக் கிடைத்தற்கரிய செல்வமாகும். இத் திருவடிவங்களைச் சென்று பார்வை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யிட்டு மகிழ்வது, சைவமக்கள் கடமையாகும். சிவபக்தியின் உருவத்தைத் தரிசிக்க விரும்புவோர் இத்திரு வடிவங்களைப் பார்வையிடுதல் வேண்டும். பொலனறுவாத் திருவடிவங்கள் 11ம் நூற்றாண்டிற்கும், இடைப்பட்ட காலத்தனவெனக் கருதப்படுகின்றது.

திருக்கோணமலைத் திருவடிவங்கள், இன்றைக்குச் சில ஆண்டுகளுக்கு முன் திருக்கோணமலையில் கண்டெடுக்கப்பட்டன. அவ்வடிவங்கள் திருக்கோணேஸ்வரர் ஆலயத்திற்குச் சேர்ந்தன. அவ்வாலயத்தைப் போத்துக்கேயர் உடைத்த காலத்தில் இத்திருவடிவங்கள் அவர்களது கையிலகப்படாது மண்ணுள் மறைத்து வைக்கப்பட்டன. திருக்கோணேஸ்வரர் ஆலயத்தின் வடிவங்களெனக் கண்டெடுக்கப்பட்டன. உமா சகித சுகாசனமூர்த்தி, சந்திரசேகரமூர்த்தி, பார்வதிதேவி, கணேசர், ஆகியன. சந்திரசேகரமூர்த்தி, மிகப் பழமையுடையதாகக் காணப்படுகின்றது. சுகாசனமூர்த்தியும், பார்வதிதேவியின் வடிவமும் கலை வனப்பு வாய்ந்தன. பல நூற்றாண்டுகளாக மண்ணுள் கிடந்தும் பழுதடையாது இருப்பது ஆச்சரியப்படத்தக்க நிலையேயாம்.

குளக்கோட்டன் என்னும் அரசனால் கட்டப்பட்ட திருக்கோணேஸ்வரர் ஆலயத்திலிருந்த கற்றூண்கள் இன்றும் திருக்கோணமலைக் கோட்டையிலிருப்பதைக் காணலாம். அலங்காரச் சித்திரங்கள் அமைந்த கருங்கற்கள் பல, அக்கோட்டையின் சுவர்களில் வைத்துக் கட்டப்பட்டிருப்பதை நாம் நேரில் கண்டோம். அங்கு காணப்படும் தூண்களிலிருந்து அவ்வாலயம் பாண்டியர் காலத்துச் சிற்ப முறையில் அமைந்திருத்தல் வேண்டுமென அநுமானித்தல் பொருத்தமாகும். கந்தளாய்க் குளத்திற்கருகாமையில் காணப்படும் சிவாலயத்தின் பாகங்களிற் கிடக்கும் கற்றூண்களும், திருக்கோணமலைக் கோட்டையில் காணப்படும் தூண்களை ஒத்தனவாக இருக்கின்றன.

ஈழநாட்டில், சிவாலயங்கள் பல இடங்களிலும் காணப்பட்டாலும், யாழ்ப்பாணமே சைவ சமயத்திற்கு நிலைக்களமாக விளங்கியது. நல்லூரை இராசதானியாக்கி அரசு செலுத்திய ஆரியச் சக்ரவர்த்திகள் தமிழையும் சைவத்தையும் போற்றி வளர்த்தார்கள். நல்லை நகர் அலங்காரமான பல கட்டிடங்களையும் கோயில்களையுமுடையதாய் விளங்கியதென யாழ்ப்பாண வைபவமாலை கூறுகின்றது. அக்காலத்திலிருந்த ஆலயங்கள் ஒன்றும் இப்பொழுது இல்லை. இக்காலத்து ஆலயங்கள் இருந்த இடங்களில் இன்று காணப்படும் ஆலயங்கள் யாவும் பிரித்தானிய ஆட்சிக் காலத்தில் கட்டப்பட்டன. இக்கோயில்களில் காணப்படும் சிற்ப வடிவங்கள் கலைவனப்பு வாய்ந்தனவாக இல்லை. போத்துக்கேயர், ஒல்லாந்தர் காலங்களில் சைவ சமயமும், தமிழ்க்கலைகளும் நாட்டில் வளர்ச்சி குன்றி அழியும் நிலையில் இருந்தனவாதலின், பிரித்தானியர் காலத்தில் செய்யப்பட்ட சிற்பங்களும் மட்டமான வேலைப்பாடுகளுடையனவாகவே அமைந்தன. யாழ்ப்பாணத் தமிழ் அரசர்களது கலைச்செல்வங்கள் எவையும் இதுவரை கண்டறியப்படவில்லை. அங்குமிங்குமாகச் சில விக்கிரகங்கள் கிணறுகள் வெட்டும்பொழுதும், வீடுகளுக்கு அத்திபாரம் வெட்டும்பொழுதும் எடுக்கப்பட்டன. அவையும் அழகுவாய்ந்தனவாகக் காணப்படவில்லை. இப்பொழுது இருக்கும் சட்டநாத கோவில் கேணியை வெட்டத் தொடங்கியபொழுது சில விக்கிரகங்கள், கஜலட்சுமி, பயூரசுப்பிரமணியர், தட்சணமூர்த்தி, சனீஸ்வரன் ஆகியன அகப்பட்டன. அவை இப்பொழுது யாழ்ப்பாண நூதன பொருட்காட்சிச் சாலையில் வைக்கப்பட்டுள்ளன. சட்டநாதர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவாலயம் சிங்கை பரராசசேகரன் என்னும் அரசனால் 15-ம் நூற்றாண்டில் நல்லை நகருக்கு வடபாலில் கட்டப்பட்டது. இவ்வாலயம் போத்துக்கேயரால் அழிக்கப்பட்டு, பிரித்தானியர் காலத்தில் மறுபடி கட்டப்பட்டது. அவ்விடத்தில் எடுக்கப்பட்ட திருவடிவங்கள் பரராசன் கட்டிய கோவிலுக்குச் சொந்தமானவை. அவை விஜய நகர சிற்பமுறை விளங்கிய காலத்தனவாதல் வேண்டும்.

யாழ்ப்பாணத்தில் இன்று காணப்படும் பழைய ஆலயம் வண்ணார்பண்ணை சிவன் கோவிலேயாம். இவ்வாலயம் வைத்திலிங்கச் செட்டியாரால் ஒல்லாந்தர் காலத்தில் 1787-ம் ஆண்டில் கட்டப்பட்டது. கர்ப்பக்கிரகம், அந்தராளம் அர்த்த மண்டபம், மகாமண்டபம், விமானம், கோபுரம், திருக்குளம், நந்தவனம் முதலிய அம்சங்களோடு கருங்கற்திருப்பணியாக அமைக்கப்பட்டுள்ளது. இவ்வாலயத்தில் காணப்படும் தையல்நாயகி அம்பாளின் திருவடிவம் மிக அழகு வாய்ந்தது.

இருபதாம் நூற்றாண்டில் ஏற்பட்ட சமய மறுமலர்ச்சியின் பயனாக இலங்கையின் பல பாகங்களிலும் சைவ ஆலயங்கள் சிற்ப முறைக்கமையப் புதுப்பிக்கப்பட்டுவருகின்றன. இவ்வரிய பணியில் முன் மாதிரியாக விளங்கிய பெருமகனார் சேர். பொன்னம்பலம் இராமநாதன் அவர்களின் கலைப்பணியை இங்கு குறிப்பிடுதல் அவசியம். தமது குடும்பத்துக்குச் சொந்தமான கொழும்பு பொன்னம்பலவாணேஸ்வரர் சிவாலயத்தை, இக்காலத் தென் இந்திய சிற்பமுறையில் கருங்கற் திருப்பணியாக கட்டிமுடித்துள்ளார்கள். சுற்றுப்பிரகாரம் முழுவதும் கருங்கல் தூண் மண்டபமாக அமைந்துள்ள சைவ ஆலயம் இதுவொன்றே ஆகும். இதுபோன்ற கலைவனப்பும் சிற்ப அலங்காரச் சித்திர மண்டபங்களும், தூண்களும் நிறைந்த ஆலயம் இலங்கையில் வேறு எங்கும் இல்லை. திராவிட சிற்பக்கலை அழகுக்கு இலங்கையில் ஓர் எடுத்துக்காட்டாக விளங்கும். திருத்தனி இதுவேயாகும். இது விலைமதிக்கவொண்ணாத சிற்பச் செல்வமாக இந்நாட்டில் எக்காலத்தும் நின்று விளங்கும் என்பதில் ஐயமே இல்லை.

G. R. STORES

POINT PEDRO.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செல்வச்சந்நிதியின் கோலாகலம்.

— பொன்மலர் —

தமிழர்கள் வணங்கும் கடவுள்களில் முருகக்கடவுளும் ஒருவர். இவ்வழிபாடு இன்று நேற்றல்ல பண்டுதொட்டு இருந்துவருகிறது. இக்கடவுளுக்கும் ஏனைய கடவுள்களுக்குச் செய்வதுபோல் விழாச்செய்வது வழக்கம். இவ்விழா தொண்டைமானாறு செல்வச்சந்நிதியில் சிறம்பட நடைபெற்று வருகிறதென்பது மகிழ்விற்குரியது.

கவனங்களை வேறு திசையில் திருப்பிக்கொண்டிருக்கும் மக்கள் இத்திருவிழாக் காலங்களில் முருகக்கடவுளின் திருவடியே துணையெனத் தம்மை ஈடுபடுத்திக்கொள்வர். பல் வேறுபட்ட மக்கள் ஒன்றுகூடி வழிபடுவதை இத்திருவிழாக் காலங்களிற்தான் காணமுடியும். இக்காலங்களிற் சிலர் வீட்டையே விட்டுவிட்டுப் பெண்டு பிள்ளைகளுடன் குடும்பமாக வந்து விழாக்காலம் முடியும்வரை நின்று கடவுளுக்குப் பக்தி செய்தும் வேறு இன்னோரன்னவற்றைக் கண்டும் கேட்டும களித்தும் வருவது வழக்கம்.

ஈழத்தின் தெற்கேயுள்ள கதிர்காமத்தைப்போல் ஒரு சாதாரண அமைப்பையுடையதுதான் தொண்டைமான் ஆறு செல்வச்சந்நிதியும். '**தொண்டைமான் ஆறு** என்னும் பெயர் கொண்டு அழைக்கப்படும் ஆற்றிற்கு அருகில் அமைக்கப்பட்டிருக்கிறது இக்கோவில். கோவிலின் நடுவில் அமைக்கப்பட்டிருக்கும் முருகக்கடவுளின் மண்டபத்துக்கு இடதுபக்கத்தில் அவருடைய மனைவியாகிய வள்ளியம்மையின் மண்டபமும், மறுபக்கத்தில் பிள்ளையாரின் மண்டபமும் அமைந்திருக்கக் காண்கிறோம். இவற்றைச் சுற்றி மூன்றடிச் சுவர் எழுப்பப்பட்டுள்ளது. கோவிலின் மேற்கெல்லையில் தொண்டைமானாறும் ஏனைய மூன்றுபக்கங்களும் முதுமரங்களால் சூழப்பட்டுக் கோடைக் கானலிற் தங்கி இருக்கக்கூடிய ஒரு நல்ல குளிர்ச்சி பொருந்திய சோலைகளைக் கொண்டன. திருவிழாக் காலங்களில் இச்சோலைகள் பெரிதும் வேண்டப்படுவதைக் காண்கிறோம். மேலும், இச்சோலைகளை மயில்களும், மான்களும் அழகு செய்கின்றன.

ஆவணித் திங்கள் பிறந்ததும் மக்களின் சிந்தையில் உதயமாவது 'சந்நிதித்திருவிழா' வெனக் கூறல் சாலப் பொருந்தும். உற்சவம் (கொடியேற்றம், எப்பொழுது ஆரம்பமாகுமென விரல் விட்டெண்ணிக்கொண்டிருப்பர் மக்கள். கோவிலுக்கு வருவதற்கு வேண்டிய ஒழுங்குகள் முன்கூட்டியே ஆயத்தஞ்செய்து வைப்பர். மேலும், பத்திரிகைகள் சந்நிதிகோவிலின் புகைப்படங்களுடன் வெளிவரும்.

உற்சவத் தினத்தன்று வியாபாரிகள் தங்கள் தங்கள் கடைகளுக்கேற்ற இடங்களைப் பிடித்துக்கொள்வர். அநேகமாக எல்லாவிதப்பொருட்களையும் வாங்கலாம்; விற்கலாம். கிராமவாசிகளுக்குச் சந்நிதி—திருவிழாக் காலங்களில் ஒரு பட்டணமாக விளங்குகிறது. இராக்காலங்களில் மின் ஒளிகள் வானத்தில் மீன்கள் பிரகாசிப்பதுபோல் பிரகாசிக்கும். மின் ஒளிகள் அலுமினியம், பித்தளைப்பாத்திரங்களை மேலும் அழகுசெய்யும். எத்தனையோ ஏழைமக்கள் தங்கள் துகையின் திறமை கொண்டு செய்த பொருட்களுடனும், குட்டி விளக்குட




திருவிழாவின்போது கோவில் முன்றிலில்
தீக்குளித்தல் முக்கிய இடம் பெறுகிறது.



சிறுார்களும் காவடி தாங்கி பக்திமேலிட்டு
முருகப்பெருமானிடத்துச் செல்கின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



விழாக் காலத்தில் அடியார்கள் பெருமானுடன் பின்தொடாந்து
வீதிவலம் வருகின்றனர்.



திருவிழாக் காலத்தில் தூரத்துக் கிராமங்களிலிருந்து
மாட்டுவண்டிகளில் வரும் பக்தர்கள் எல்லைப்புறங்களில்
முகாமிட்டிருக்கும் காட்சி,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

னும், அரைத் தூக்கத்துடனும் விளங்கும் காட்சியைக் கண்ணுற்றால் 'ஏழைகள் சந்நிதிகோவிலைத் தஞ்சமாகக் கொண்டுள்ளார்கள்' எனத் தோன்றும். மக்கள் செல்லும் வழிகளினது இருமருங்கிலும் இரப்போர் இருந்தும், கிடந்தும் யாசிப்பர்.

சனத்திரளை—சனசமுத்திரத்தைத் திருவிழாக்காலங்களில் இரவொடு பகலாகக் காணலாம். இத்திரளை ஒழுங்குபடுத்தி நல்ல அமைப்பை உண்டாக்கக் காவலாளிகளும், சாரணர் இயக்கமும் தம் கடமைகளைச் செய்வர்.

பக்தகோடிகள் அநேகமாகக் கோவிலினது மடங்களிற் தங்குவர். கோவிலைச் சுற்றி ஆங்காங்கு நாற்பத்தைந்து மடங்கள் உள்ளன. இம்மடங்கள் எப்பொழுதும் மக்களால் நிரப்பப்பட்டிருக்கும். இட நெருக்கடியின்போது பாமரமக்கள் வண்டிகளையே உண்டுறைசாலையாகப் பாவிப்பர். மடங்களுள் 'ஆனந்தாச்சிரமம்' எவரையும் கவரவல்லது. இதைக் கனம் மயில்வாகனசுவாமிகள் திறம்பட நடத்திவருகிறார். இம்மடம் தனக்கென ஒரு சிறப்பான சரித்திரத்தையும் கொண்டுள்ளது.

உற்சவம் தொடங்கியதும் பக்தர்களும், சிறப்பாகக் கோவிலுக்குவரும் பாமரமக்களும் புலால் உண்ணாதிருப்பார்கள். பக்திக்கு இதுதான் வேண்டப்படுவது.

"அருளல்லது யாதெனில் கொல்லாமை கோறல்
பொருளல்லது அவ்வூன் தினல்"

என்ற குறள் இவ்விடத்தில் நினைவு கூரத்தக்கது.

திருவிழாக்காலம் வழக்கமாக ஆவணித் திங்களில் அமாவாசை அற்றுப் போகும் நேரத்தில் ஆரம்பமாகும். இவ்வுற்சவ அன்றையிலிருந்து ஆறு நாட்கள் வரை முருகக் கடவுளுக்குச் செய்யும் விழாக்கள் இரவில் மட்டும்தான் நடைபெறும். ஏழாம் நாள் தொடங்கி விழாக்கள் இரவும் பகலும் நடைபெறும். பத்தாம் நாள் திருவிழா பூங்கா. பதினான்கும் பதினைந்தும் முறையே சப்பறத் திருவிழாவும் தேர்த்திருவிழாவுமாகும். பௌர்ணமியன்று தீர்த்தத்திருவிழா நடைபெறும் இதற்கடுத்து மௌனத் திருவிழா இதுவே கடைசித்திருவிழாவாக நடைபெறும். இக்காலங்களில் கோவிலினது வீதிகளைச்சுற்றி அங்குமிங்குமாக தண்ணீர்ப் பந்தல்கள் சனங்களின் தாகங்களைத் தீர்த்து வைக்கும்.

திருவிழாக் காலங்களில் பக்தர்கள் முருகக்கடவுளுக்குச்செய்யவேண்டிய கடன்களை அர்ச்சனை, காவடி, கரகம், தீச்சட்டியெடுத்தல் போன்றவைகள் மூலம் செலுத்துவர்.

காவடியாட்டம் சந்நிதியில் ஒரு கலையாக வளர்ந்துள்ளதெனக் கூறலாம். சில சிறுவர்களைத் தேர்ந்தெடுத்து அவர்களுக்கென ஓராண்டுவரை இருந்து நாட்டியம் கற்பிப்பதுபோல் கற்பித்து திருவிழாக் காலங்களில் சந்நிதிமுன் காவடியைத் தோழிலேந்தி தாளத்துடன் ஆடுவார்கள்.

"அருணகிரி நாவிற் பழக்கம் தரு
மந்தத் திருப்புகழ் முழக்கம் பல
வடியார் கனமொழி போதினி லமராபதி [ம்
யிமையோர்செவி யடைக்கும் அண்டம் உடைக்கு
கருணை முருகனைப் போற்றித் தங்கக்
காவடி தோளின் மே லேற்றிக் கொழுங்
கனலேறிய மெழுகாய் வருபவரே வருமிகவேகதி
கண்பார் இன்பம் பூண்பார்"

என்ற பாடல் கேட்பதற்கு இனிமையையும் உற்சாகத்தையும் கொடுக்கவல்லது. இப்படி ஆடும் ஆட்டத்தை 'ஆட்டக்காவடி' என அழைப்பர். இதைப்பார்ப்பதற்கு எவரும் தவறுவதில்லை.

பார்ப்பதற்கு மயிர்க் கூச்சலைக் கொடுக்கவல்லது 'தூலாக்காவடி'. மனிதன் எந்தெந்த விதங்களில் தன்னை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அர்ப்பணித்துக் கொள்கிறான். கடவுளுக்குத் தன்னை அர்ப்பணித்துக் கொள்ளும்பொழுது தன் உயிரையே வருத்தித் தியாகம்செய்யும் அளவுக்கு வந்துள்ளான். தோளில் மூன்றுபெரும் முட்கம்பிகளைப் பாய்ச்சிப் பலம் பொருந்திய தூண்டல்களினால் இவற்றையிணைத்து அதி உயரத்தில் ஒரு துலாவை நிறுத்திக் காவடி எடுக்கும் பக்தனை இதிற் தொங்கவிடும் அந்த அகோரக் காட்சியைப் பார்த்துப் பரவசப்படாத மக்களும் உள்ளனரோ?

‘அனுமார்க் காவடி’ ஆவேசத்துடனும் தாளத்துடனும் ஆடும்காவடி. அனுமாரைப்போல் வேடம் தரித்துப் பக்தர் ஆடுவர்.

‘தேர்க்காவடி’ முதுகில் முட்கம்பிகளால் குத்தப்பெற்ற செடிலாற் சிறிய தேரை இழுத்து ஊர்வலம் வருதல்.

‘கரகம்’ தலையிற் சருவக்குடம் வைத்து அதன்மேல் சோடனை செய்து பாட்டிற்கேற்றவாறு ஆடி வீதிவலம் வருதல்.

**‘தெந்தன தெனாதெனத னாதெந்த னானா**
**தெனனா தெனாதெந்த னாதெந்த னானா.’’**

இப்பாடலை இராகத்துடன் பாடுங்கால் பாட்டுடனும், இதற்குப் பக்கவாத்தியமாக அடிக்கும் உடுக்குடனும் மனதைப் பறிகொடுத்துவிடுவோம்.

‘அங்கப்பிரதட்சணை’ நிலத்தில் மெய்யை வருத்திச் செய்யும் ஒருகடன். நெடுந்தூரத்திலிருந்து சந்நிதி வந்தடையும்வரை மெய் நிலத்திற் படும்படி கைகூப்பியவண்ணம் உருண்டு வரும் காட்சி. திருநாவுக்கரசர் கைலையை அடையவேண்டும் என்ற ஒரே நோக்கம்கொண்டு தமது மெய் தேய்ந்து போனபின்னும் ஊக்கத்தையும் பக்தியையும் கைவிடாது சென்றதை ஞாபகமூட்ட வல்லது இந்த அங்கப்பிரதட்சணை.

செல்வச்சந்நிதித் திருவிழாக்களில் முக்கியமாக நான்குவிழாக்களைக் கூறலாம். அவை பூங்கா, சப்பறம், தேர், தீர்த்தம். இந்நான்கு திருவிழாக்காலங்களிலும் இலங்கையின் பல பாகங்களிலுமிருந்து பல்வேறு சமயத்தவர்கள் வந்து போவது வழக்கம். இக்காலங்களில்தான் ஏனைய நாட்களைவிடச் சனத்திரள் மிகுந்து காணப்படும். செல்வச்சந்நிதி கோவிலினது கேணிகள், குளங்கள், கிணறுகள்வற்றிக் கிடக்கும்.

திருவிழாவில் முக்கியமாகக் குறிப்பிடத்தக்கவர்கள் ‘பூக்காரர்’ என்போர். பூக்காரர் இச்சந்நிதிகோவிலில் இருப்பதுபோல் ஈழத்தில் வேறெந்தக் கோவிலிலுமில்லை. இது சந்நிதிகோவிலுக்கு மேலும் ஒரு சிறப்பைக் கொடுக்க வல்லது. இப்பூக்காரர் திருவிழாவுக்கு வேண்டிய பூக்களை ஏனைய பாகங்களுக்கும் சென்று பூப்பறிப்பர். பூவினால் செய்யவேண்டிய சோடனைகளை முக்கியமாக இவர்கள் செய்வர். இதனால் பூக்காரர் திருவிழாக் காலங்களில் கண்போல் விளங்குவர். மேலும் விழாவுக்கென்றே இலங்கையில் பலபாகங்களிலுமிருந்தும் பக்தர்கள் பூக்களைக் கூடை கூடையாக அனுப்பிவைப்பர்.

பூக்கள் அதிகமாகத் தேவைப்படுவது பூங்காவனத்திருவிழாவில். சோடனையின் பின் உண்மையிலேயே சாமியின் இருப்பிடம் ஒரு தனி அழகைக் கொடுக்கும். இதில் அமைக்கப்படும் ‘சாத்துப்படி’ கண்களைக் கொள்ளை கொள்ளும். இச்சாத்துப்படி கைதேர்ந்த பூக்காரர்களால் செய்யப்படும்.

‘சப்பறத் திருவிழா’வில் சிகரம் செய்து அதை முற்றிலும் மணிகளால் அலங்கரிப்பர். சுவாமியை இச்சப்பறத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தில் இருத்தி வீதிவலம் வரும் காட்சி மிக அழகுவாய்ந்தது. மின் ஒளியினால் முத்துக்களும் மணிகளும் ஒளிக்கும் காட்சிதான் என்னே!

'தேர்த்திருவிழா' சுவாமியைத் தேரில்வைத்து வீதிவலம் வருதல். கைதேர்ந்த சிற்பிகளால் செதுக்கப் பெற்றது செல்வச்சந்நிதித் தேர். தேரைச் சுற்றி பல வர்ணச் சேலைகளால் அலங்கரிப்பர்.

இப்படி சுவாமியை வீதிவலம் கொண்டு வரும்பொழுது அர்ச்சகர் சுவாமிக்குத் தீபம்காட்டி முன் அழைத்துச் செல்வர். அதன் பின் பஜனைக் கோஷ்டி தொடரும். பஜனையில் தேர்ந்த பாடகர்கள் பஜனைப் பாடல்கள் பாடி மக்களின் உள்ளத்தைக் கொள்ளை கொள்வர்.

" காரார் குழலாள் கலைமகள் நன்றாய்
எந்நா இருக்க யானுனைப் பாட
எனைத் தொடர்ந் திருக்கும் எந்தை முருகனைப்
பாடினேன் ஆடினேன் பரவசமாக
ஆடினேன் நாடினேன் ஆவினன் பூதியை"

என்ற பாடல் உள்ளத்தைக் கொள்ளை கொள்ளும்.

'கதாப் பிரசங்கம்' நன்கு படித்துப் பாண்டித்தியம் பெற்றவர்களால் முருகன் — வள்ளி கதைகளையோ அல்லது பாடல்களையோ சொல்லி அவற்றை மக்களுக்கு விளக்கவைப்பர். இந்நாட்டுப் பாண்டித்தியம் பெற்றவர்களும், இந்தியாவில் இருக்கும் சமயப் பெரியார்கள் சிலர் வந்து கதாப்பிரசங்கம் வைப்பது வழக்கம். மக்கள் அமைதியாக இருந்து தமது தூக்கத்தையும் கவனியாது கதாப்பிரசங்கத்தை உற்றுக் கேட்டுக்கொண்டிருப்பர்.

நான்காவது முக்கிய திருவிழா 'தீர்த்தத் திருவிழா' இவ்விழா பௌர்ணமியன்று நடைபெறும். சுவாமியைக் கேணிக்கு அழைத்துச் சென்று தீர்த்தமாட்டுவர். சுவாமி கேணியை அணுகுவதற்குமுன் கேணியைச் சுற்றியுள்ள மதில்கள் மரங்கள் முதலியன மக்களால் நிரம்பியிருக்கும். தீர்த்தமாடும்பொழுது 'அரோகரா' என்ற கோஷம் நாலுபுறமும் கிரீட்டு ஒலிக்கும். தீர்த்தமாடி முடிந்ததும் பக்தர்கள் தொப் தொப் பென்று விழுந்து தங்களது பாவங்களைப் போக்க நீராடுவர். நீராடுவது எல்லோருக்கும் இச் சந்தர்ப்பத்தில் முடியாத காரியமாக அமையும். இக்காரணத்தால் கரையில் இருக்கும் பக்தர்கள் தண்ணீர் அள்ளி நாலுபுறமும் தெளிப்பார்கள். அந்தப் புண்ணிய துளிகள் பட்டதும் பாவங்கள் தம்மை விட்டகன்றதெனத் திருப்திகொண்டு வெளிவருவர்.

கடைசியாக நடைபெறும் திருவிழா 'மௌனத்திருவிழா' இத்திருவிழாவில் முக்கியமாகப் பங்கெடுப்போர் பூக்காரரேயாவர். மௌனத் திருவிழா எனக் கூறல் மிகப் பொருந்தும். இந்நாளில்தான் பக்திசெய்தும், வேறு இன்னோரன்ன களித்துமிருந்த மக்கள் வீடு செல்லும் நாள். மூட்டை முடிச்சுக்களுடன் போகும் நாள். வாகனங்களுக்காகத் திரள் திரளான மக்கள் காத்திருக்கும் நாள். சந்நிதியின் கோலாகலத்தை இனி எப்போ பார்க்கப்போகின்றோமென ஏங்கித் தவிக்கும் நாள். என்றாலும், மக்கள் முருகக்கடவுளின் அருளைப் பெற்றுவிட்டார்கள். இதைவிட வேறென்ன வேண்டுவது?

## சுவாமி சிவானந்தரின் பொன்மொழிகள்.

(தொடர்ச்சி)

4. அன்பாகவும் பிரியமாகவும் இருப்பது ஒரு தர்மம். தனக்குச் செய்த தவறை மறப்பதும் மன்னிப்பதும் தர்மம். துயருறு பவனுக்கு ஒரு அன்பான வார்த்தை சொல்லுவதும் தர்மம்.

5. உனது இதயத் தோட்டத்திலே அன்பெனும் அல்லியையும் தாய்மையென்னும் ரோஜாவை தைரியமென்ற சம்பகத்தை யும் அடக்கம் என்ற மந்தாரையையும் கருணை எனும் மல்லிகை யையும் பயிர் செய்.

6. பொறாமை, துவேஷம், சந்தேகம், பழிவாங்கும் மனோபாவம், பெருமை, சுயநலம், முதலிய களைகளை அகற்றி அன்பை உனது இதயப் பூங்காவிலே பயிரிடு. அன்பின் சக்தி சொல்லில் அடங்காதது. அன்பின் ஆழம் அளக்க முடியாதது. அதனு டைய புகழோ வர்ணிக்க இயலாதது. அது தெய்வீகமானது.

7. அன்பும் பிரார்த்தனையும் இல்லாத வாழ்க்கை பாலைவனத்தில் பாலற்ற மரத்தை ஒத்தது.

8. வருந்தவேண்டாம் நண்ப! குன்ரு முயற்சி கொண்டு வாழ்வின் முடிவினை அடைவாய்.

9. மனிதனுக்கு இனிப் பட்டங்கள் தேவையில்லை. ஆனல் ஒழுக் கம் வேண்டும். மேல் படிப்பு வேண்டாம். ஆனல் அறிவுவேண் டும்.

10. மயக்குபவைகளைத் தடுத்து நிறுத்து. அகமுகவாழ்வைக்கொள். எல்லாத் துன்பங்களும் முடிவுறும். நீ தோல்வியுற்ருலும் வெற் றிக்கு ஒருபடி சமீபிக்கிருய் செல், மேலும் செல்.

11. உறுதியானதும் நன்கு தீர்மானித்ததுமான முயற்சியைச்செய். நீ வெற்றியடைவாய் முழு முயற்சி முழு வெற்றி.

12. உலகத்தில் நல்லது என்றும் கெட்டது என்றும் ஒன்றுமில்லை. உனது சிந்தனையே அவ்வாறு ஆக்குகிறது.

13. இறைமையைக்காண வானத்தைப் பார்ப்பது பிரயோசனமற் றது. உன் உள்ளே திரும்பிப் பார்.

14. வாழ்வு தொண்டுசெய்ய ஏற்பட்டதேதவிரச் சுயநலத்திற்கல்ல.

15. உனது தேவையில் பிரார்த்தனையை அறிவாய் துன்பத்தில் சிந் திக்கவும் விசாரணை செய்யவும் முற்படுவாய்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

235.5
CEL

AR

Importer of Tiles

R. Sivakumaran

GENERAL MERCHANT

76, HOSPITAL ROAD,
JAFFNA

ARCHIVES

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Estd. 1929

T { Phone: 296
Grams: ROHINI

S R S

# ஜவுளி மாளிகை

## யாழ்ப்பாணம்.

வட இலங்கையில் முதன்மையான ஜவுளி ஸ்தாபனம்

ஏராளமான ஜவுளி தினுசுகளை
வரவழைத்திருக்கிறோம்.

எந்த விதமான ஜவுளிகளையும்
விலை சகாயமாய்ப் பெற்றுக்கொள்ளலாம்.

**S. R. செல்லத்துரை**

216, கே. கே. எஸ். ரோட், யாழ்ப்பாணம்.

# நியூ றெடிமேட் ஸ்ரோர்ஸ்

அதிபர்: ஏ. எம். கரீம்

வட இலங்கையில் மிகவும்
புகழ் வாய்ந்த
தையல் ஸ்தாபனம்

A1, பெரியகடை, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

For anything in photography it is:

# VENUS FOTOS

37, Power House Road, Jaffna

Prop: S. Thurairajah

போட்டோக்கள் சம்பந்தப்பட்ட எதற்கும்:

# வீனஸ் போட்டோஸ்

37, மின்சார வீதி, யாழ்ப்பாணம்.

# "சிரநேத்திராஞ்சனத் தைலம்"

விடுதலையளிக்கும்போது நீங்கள்

சிரசு கண் மூக்கு

சம்பந்தமான வியாதிகளினால் துன்புறவும் வேண்டுமா?

தினமும் சிரசிலிருக்கும் இத்தைலத்தின் சக்தி நிறைந்த

ஒவ்வொரு 20 சொட்டுப் பிரமாணமும்

ஆச்சரிய பலனையளிக்கும்!


காலம் நீடித்த நோயாளர் எம்மிடம் தொடர்பு கொள்ளவும்

# மு. க. ஜெகநாதன்

யூனானி கண் நிபுணர்

பெரியகடை, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மிஸ்கின்

FOR ANYTHING
IN
TAILORING

**MISKIN**
TAILORING MART

27, GRAND BAZZAR,
JAFFNA.

---

# ஸ்ரீலங்கா புத்தகசாலையாரின்

## புதிய வெளியீடுகள்.

| | |
|---|---|
| பௌதிகம் Part I — அ. க. சர்மா | 4-50 |
| இந்து சமய பாடம் G. C. E. வகுப்புக்கு<br>வித்துவான் வேந்தனார் எழுதியது | 4-00 |
| சுந்தரகாண்டம் G. C. E. வகுப்புக்கு<br>வித்துவான் வேந்தனார் எழுதியது<br>(1962-64ம் ஆண்டுகளுக்கு) | 3-50 |
| Sanskrit Text for H. S. C. (calico) | 12-00 |
| (half calico) | 10-00 |
| Sanskrit Text for Panditha and Advanced Level | 3-00 |
| J. S. C. Engiish Practice<br>A. S. Kanagaratnam | 1-50 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நவீன பரிசில் மாளிகை

## நெல்லியடி - கரவெட்டி

★ உங்கள் தேவைகளுக்குரிய எல்லாவிதமான பொருட்களும் மிக மலிவான ஒரே விலைகளிற் பெற்றுக்கொள்ளலாம்

★ நவநாகரிக உடையலங்காரங்களுக்கேற்ற கூறைச்சேலைகள்

★ பிலிப்க, குறுண்டிக், ஹிஸ்மாஸ்ரஸ் வோய்ஸ, கிறவுண் றேடியோக்கள்

★ எந்த வைபவங்களிலும் பரிசு கொடுப்பதற்கு ஏற்ற எவர்சில்வர்

★ சுவர்க் கடிகாரங்கள், கைக் கடிகாரங்கள், மேசைக் கடிகாரங்கள்

★ பாலுணவுகள், பிஸகற் வகைகள் சொக்ளற் வகைகள்

★ பவுடர், சென்ற், சவுக்காரம், பவுண்டன் பேனுக்கள், கொப்பிகள்

★ சூட்கேஸ, டிறங், டிறவெலிங் பாக்குகள் முதலியன

★ ஆங்கில மருந்துகளும், கிருமி நாசினிகளும்

*மலிவான விலைகளில் பெற்றுக்கொள்ளலாம்.*

---

உங்கள் திருப்திக்கு ஏற்ப

செய்துகொடுக்கும் மில்

# ஸ்ரீ முருகன் மில்

உரிமையாளர்: வி. வல்லிபுரம், பரந்தன்.

**The Mill that will Please you:**

# SIR MURUGAN MILL

(Prop: V. Vallipuram)

Paranthan.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எம்மிடம்

★ நெல்லு

★ அரிசி

★ சீமேந்து

முதலியன சகாயமான விலையில் பெற்றுக்கொள்ளலாம்.

**ம. கதிரவேலு**

76, ஆஸ்பத்திரி வீதி, - **யாழ்ப்பாணம்.**

---

**Feeling Thirsty?** **T'phone: 636.**

Have a Propside!

Have it at

# MILK BAR

Its Delicious — It Gives Relief

to

ONE AND ALL

YOUNG AND OLD

22, 24, MAIN STREET, ... ... JAFFNA.

# ஸ்ரீ முருகன் கபே

கண்டி ரோட், : : பளை

எங்களிடம்

சிறந்த ருசிமிக்க சிற்றுண்டி வகைகள்,

சுத்தபோசனம், குளிர்பானங்கள்,

சுவிட்ஸ், பிஸ்கட், ரொபி வகைகள்

எப்பொழுதும்
பெற்றுக்கொள்ளலாம்.

# SRI MURUGAN CAFE

KANDY ROAD,

PALAI.

விசேஷ ஆடர்கள்

உடனுக்குடன் கவனிக்கப்படும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# A. Nallathamby

DIAMONDS, GOLD JEWELS & GEM MERCHANT.

↓

நங்கையர் மனம் விரும்பும்

நவநாகரிக நகைகள்

தரளம் பதித்த தங்க நகைகள்

நலம் பல அளிக்கும் நவரத்தினங்கள்

நம்பிக்கை, நாணயம், நயம் மிக்க நகைகளுக்கு

★ { ஒரு முறை இங்கே விஜயம் செய்யுங்கள் } ★

↓

# ஆ. நல்லதம்பி

தங்கப்பவுண் நகை, இரத்தின வியாபாரம்.

75, கன்னாதிட்டி, : : யாழ்ப்பாணம்.

தந்தி: கமலம்

ரெலிபோன்: 664


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கண்கவரும்
படங்களுக்கு

# செல்லம்ஸ்

போன்:436. யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உங்கள் கட்டிடங்களுக்கு

அசோக சக்கர ஒற்றைப்பீலி

,, ,, இரட்டைப்பீலி

ஓடுகளைப் பாவியுங்கள்.

**Use Asokachakra**

**Single Grove**

**Double Grove**

**Tiles for your Buildings**

# சுந்தரமூர்த்தி அன் சன்ஸ்,

**76, ஆஸ்பத்திரி ரோட், : : யாழ்ப்பாணம்.**

# SUNDARAMOORTHY & SONS

76, Hospital Road, Jaffna.

**Phone: 423.** **போன்: 423.**

---

# கதவு, ஜன்னல்களுக்குரிய
# புதுவித பூக்கண்ணாடிகளும்,
# சுவாமிப்படங்களும், சீனறிஸ் மற்றும்
# படங்களும் இங்கு பெற்றுக்கொள்ளலாம்.

★

வட-இலங்கையில் பிறேம் போடுவதில்

முதன்மை ஸ்தானம் வகிப்பவர்கள்

# ஜெஸிமா பிக்சர் பலெஸ்,

222, 232, காங்கேசன்துறை ரோட்,

**யாழ்ப்பாணம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

V. GANESAMOORTHY
GENERAL MERCHANT
MAIN STREET
POINT PEDRO

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டிடங்கள் கட்ட தேவையான சாமான்கள்

எங்கே நிதான விலைக்குப் பெறலாமென்ற

ஆலோசனையா?

அப்படியானல்

↓

போன் நம்பர் 302

# ஆறுமுகம் ஹாட்வெயர் ஸ்ரோர்

(நேரடி இறக்குமதியாளர்)

19, பவர்ஹவுஸ் ரோட், யாழ்ப்பாணம்.

Phone: **578**

*Best Meals & Coffee Bar*

LOGDING FACILITIES AVAILABLE.

ORDERS EXECUTED AT SHORT NOTICE

TAXI Available

PROP: A. SANGARAN

**176, HOSPITAL ROAD, JAFFNA.**

டாக்ஸி எந்த நேரமும் விடப்படும்

தங்க இடவசதிகள் உண்டு.

"சுபாஸ் கபே" 176, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

FOR TOP EYE WEAR

VISIT or Dail 486



ABDULLA & CO.

QUALIFIED OPTICIANS

K. K. S. ROAD, —:— JAFFNA.

எல்லா விதமான மூக்குக் கண்ணுடிகளுக்கும்

அப்துல்லா அன் கோ

அனுமதிபெற்ற கண் பரிசோதகர்

கே. கே. எஸ். ரோட், —:— யாழ்ப்பாணம்.

உடுப்பிட்டி ஸ்ரோர்ஸ்

Prop: த. சின்னத்தம்பி

யாழ்ப்பாணம் ரோட்,

உடுப்பிட்டி.

திறம் விமலா மூக்குப் பொடி

பெற்றுக்கொள்ளலாம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அழகான
போட்டோக்களுக்கு
சிறந்த இடம்
↓
குகன் ஸ்ருடியோ

கண்ணைக் கவரும் சீனறிகளை
இங்கிலாந்திலிருந்து
வரவழைத்துள்ளோம்.

பருத்தித்துறை

போன்: 897

உங்களுக்குத் தேவையான

★ கட்டிடச் சாமான்கள்
★ சாய்ப்புச் சாமான்கள்
★ சீமெந்து, கம்பி வலைகள்
★ அஸ்பசிற்றோ சீற்

முதலியனவும்

கலிக்கற் "குடை" மார்க்கு ஓடுகளும்

சரசமான விலைக்குப் பெற்றுக்கொள்ளலாம்.

★ லொறி வாடகைக்கு விடப்படும். ★

# க. வை. கந்தப்பர்

பிரபல வியாபாரம்,

மந்திகை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நா. துரையப்பாப் பத்தர் & சன்ஸ்

131, கஸ்தூரியார் வீதி, :-: யாழ்ப்பாணம்.

பிரபல நகை வியாபாரிகளும்
வைரங்கள் இறக்குமதியாளர்களும்.



உறுதியும் உத்தரவாதமும் உள்ள தங்க வைர நகைகளுக்குச்
சிறந்த இடம்.

# N. DURAIAPPAH PATHAR & SONS

Manufacturing Jewellers & Diamond Merchants
131, KASTURIAR ROAD, JAFFNA.
Telegram: **"Endeansons"**

---

தமிழ்ப் பெருமக்களே! தாய்மார்களே!! கவலை ஏன்?
உங்களின் சுகவீனமா? குழந்தைகளின் சுகவீனமா?

Consult

# SARASWATHY MEDICAL HALL

## சரஸ்வதி வைத்தியசாலையை

ஆலோசியுங்கள்

Physician: **S. Neelayathadchy Ammah,** வைத்தியர்: **சி. நீலாதாட்சி அம்மா**

Regd No V558

Kankesanturai காங்கேசந்துறை.

---

சிறுபிள்ளை வாதம், கண்நோய், சவிச்சுரம், மற்றும்
அநேக வியாதிகளுக்கும் எம்மைக் கலந்து ஆலோசியுங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஏ.கே.எஸ். & சன்ஸ்

★ நகைகளுக்கும்

★ வைரங்களுக்கும்

## நகை மாளிகை

வட இலங்கையின் மிகப் பெரிய

★ நகை வியாபாரிகள் ★

DIAL: 519

# A. K. S. & SONS

JEWEL HOUSE

JAFFNA.



University of Jaffna
249723
Library

UNIVERSITY OF JAFFNA LIBRARY

249723

ARCHIVES

ARCHIVES

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

UNIVERSITY OF JAFFNA LIBRARY
University of Jaffna
249723
Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org